Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 307 | திங்கட்கிழமை | புரட்டாதி 18 ஆம் நாள் 04 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## கொரோனா தொற்றால் 40 பேர் சாவு

கொழும்பு, ஒக்.4
கொரோனாத் தொற்றால் நேற்று முன்தினம் சனிக்கிழமை நாட்டில் 40 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக் 15 >

### முச்சந்தி முரளி



"ஐ.நா.விலை பம்முறதும் இஞ்ச வந்தவுடன் பாய்றதும் உவைக்கு புதிசில்லை கண்டியளோ!"

# இலங்கை அரசை மிரட்டி பணிய வைக்க முடியாது!

- வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு
- வெளியக பொறிமுறையை ஏற்கோம் எனவும் திட்டவட்டம்



கொழும்பு, ஒக்ரோபர் 4
சர்வதேச நாடுகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கவே இலங்கை அரசு விரும்புகின்றது. எந்த நாடும் எம்மை அச்சுறுத்த முடியாது. அதேபோல் எந்த நாட்டுக்கும் நாம் அடிபணியவும் மாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். 15 >

## இலங்கை வந்தடைந்தார் இந்திய வெளியுறவு அமைச்சர்!

இந்திய நிதியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை யாழில் பார்வையிட்டார்



யாழ்ப்பாணம், ஒக்.4
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஶ்ரீங்லா நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வந்தார். இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது என்று கூறப்பட்டுவரும் நிலையில், இந்திய வெளியுறவுச் செயலரின் வருகை முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.
நாட்டை வந்தடைந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் 15 >

## அரசுக்குள் முறுகல்

பஸில் பகிரங்க எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.4
அரசின் தற்போதைய செயற்பாடுகளால், அரசின் பங்காளிக் கட்சிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ள நிலையில், அரச கூட்டுக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. வெளிநாடுகளுடன் அரசு மேற்கொள்ளும் உடன்படிக்கைகளாலேயே பங்காளிக் கட்சிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளன என்று தெரியவரு 15 >



## இலங்கை – இந்திய ஒப்பந்த நீடிப்பு: இன்னமும் தீர்மானமில்லை



கொழும்பு, ஒக்.4
திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பான இலங்கை-இந்திய உடன்படிக்கையை புதுப்பிப்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.
1987 ஆம் ஆண்டு கைச்சாத்தி 15 >

## கலாசார மண்டபப் பராமரிப்பு 5 ஆண்டுகள் இந்தியாவிடம்!

யாழ்ப்பாணம், ஒக்.4
யாழ்ப்பாணம் நகரில் இந்திய அரசின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுவரும் கலாசார மண்டபம் மிக விரைவில் திறக்கப்படும் என்று இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஶ்ரீங்லா தெரிவித்தார். 15 >

## ஊரெழுவில் துப்பாக்கிச் சூடு

யாழ்ப்பாணம், ஒக்.4
போக்குவரத்து விதிமுறைகளை மீறி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவரை விசாரணைக்குட்படுத்த முயன்ற 15 >

## வீடு புகுந்த கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி கொள்ளை!

கொடிகாமம், ஒக்.4
நாவற்குழி மேற்கில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள், வீட்டில் இருந்த தாயையும், மகனையும் தாக்கிவிட்டு பணம் மற்றும் பொருள்களைக் 15 >

## ஆசிரியர் தினத்தன்று மாபெரும் போராட்டம்!

இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.4
ஆசிரியர்கள், அதிபர்கள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் ஆசிரியர் தினமான எதிர்வரும் 6ஆம் திகதி பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். 15 >

## தமிழ் மக்களாட்சி செயற்குழு உருவாக்கத்துக்கு பலத்த ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக்.4
தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்தொருமித்து ஈழத் தமிழர் கூட்டுரிமைகளை உலக அரங்குக்கு முன்னெடுக்கத் 15 >

## பாடசாலை ஆரம்பிப்பதற்கான நிபந்தனைகள் ஆளுநர்களுக்கு

கொழும்பு, ஒக்.4
பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதன் முதல் கட்டத்துக்கான நிபந்தனைகள் அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் மாகாண ஆளுநர்களுக்கு இடையே சில 12 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக கடுமையான அணுகுமுறை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 4
ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக மென்மையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க முடியாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீர சேகர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறான நடவடிக்கையை எடுக்காவிட்டால் நாட்டை அபிவிருத்திசெய்ய முடியாது. அமைச்சரவையிலும் இதனைத் தெரிவித்துள்ளேன்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவிக்கொண்டுள்ள தருணத்தில் சதிகாரர்கள் ஒரு லட்சம் பேரை ஆர்ப்பாட்டங்களுக்காக வீதிகளுக்குக் கொண்டுவந்துள்ளனர். கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் அப்பாவி ஆசிரியர்கள் பலர் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர்- என்றார். (ம-இ)



## இந்திய வெளியுறவுச் செயலாளர் பிரமுகர்களுடன் நேற்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4
யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய வெளிவிவகார செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஶ்ரீங்லா திருநெல்வேலியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் அரசியல் பிரமுகர்களை நேற்றிரவு சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோரும் உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஆகிய அரசியல் பிரமுகர்களும், அரசியல் ஆய்வாளர்களான கே.ரி. கணேசலிங்கம், நிலாந்தன், யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-125)

# தடுப்பூசி ஏற்றியோருக்கு மட்டுமே இனி அனுமதி!

## வவுனியா பிரதேச செயலகம் அறிவிப்பு




வவுனியா, ஒக்.4
கொரோனா தடுப்பூசி ஏற்றியவர்கள் மட்டுமே பிரதேச செயலகத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று வவுனியா பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

பிரதேச செயலகத்துக்கு சேவைகளைப் பெற வருவோர், தடுப்பூசி அட்டையையும், தேசிய அடையாள அட்டையையும் கைவசம் வைத்திருப்பது அவசியமானது என்றும், சேவைகளைப் பெற வருவோர் குறைந்தது ஒரு டோஸ் தடுப்பூசியையாவது பெற்றிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் பிரதேச செயலகத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், அவர்களுக்கு நுழைவாயிலில் வைத்தே சேவை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை இன்று முதல் நடைமுறைக்கு வரும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-110)

# கொரோனாத் தொற்று நீங்கவேண்டி யாழ்ப்பாணத்தில் கூட்டுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக். 4
கொரோனாத் தொற்று நீங்க வேண்டி யாழ்ப்பாணம் கிறிஸ்தவ திருச்சபைகளின் கூட்டுப் பிரார்த்தனை அண்மையில் யாழ். தூய மரியன்னை ஆலயத்தில் நடைபெற்றது.



யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இந்தக் கூட்டுப் பிரார்த்தனை முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக கொரோனா நோய் நீங்க அரும்பணியாற்றிக்கொண்டிருக்கும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ பணியாளர்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் அனைவரது நலனுக்காகவும் இந்த வழிபாடு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பிரார்த்தனை நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட திருச்சபைகளின் குருமார்கள், பங்குத் தந்தையர்கள் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ-20)



# எஸ்.ரி.எப். சுற்றிவளைப்பு 20 பேர் வசமாக சிக்கினர்

நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களில், பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மட்டக்குளிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் போதைப்பொருள்களுடன் இளைஞர் ஒருவரும் கபுவாவ வீதி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், மதுபானத்துடன் ராகம பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் தந்திரிமலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், அனுமதிப்பத்திரமின்றி கொத்தலாம்பட்டையை தன்வசம் வைத்திருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் நிட்டம்புவ அத்தனகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் கூரிய ஆயுதங்கள் பலவற்றுடன் ஐவரும், ஹொரான, பியகம, பொரலஸ்ஸ, ஜாஎல, கந்தர, கதிர்காமம், வெயாங்கொட ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் ஹெரோய்னுடன் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த பிரதேசங்களில் மதுபானத்துடன் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவுல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த துப்பாக்கியைப் பயன்படுத்தி வந்தவரை கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை ஹல்துமுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடதலாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 12 துளைகளைக் கொண்ட துப்பாக்கியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது. படல்கும்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிமுல்ல, கரதகம பிரதேசத்தில் 32 மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (ம-4-22)

# கழிவகற்றல் நடவடிக்கையில் சாவகச்சேரி பிரதேச சபை

சாவகச்சேரி,ஒக்.4
தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளமையால், சாவகச்சேரி பிரதேச சபையினரால் கழிவகற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நுளம்புப் பெருக்கம் அதிகரித்தால், டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அதற்கமைவாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் முன்அறிவிப்பு அமைவாக, கழிவகற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே வீட்டுச் சுற்றாடலில் , வீடுகளில் சேர்ந்துள்ள உக்காத கழிவுப் பொருள்களைச் சேகரித்து, உரப்பைகளில் இட்டு குறிப்பிடப்படும் இடங்களில் வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப்பிரிவில் கொடிகாமம் தெற்கு ஜே. 328 பிரிவில் குணம் இல்லேயடி, வவா கடையடி, அம்பாள் ஸ்ரோர்ஸ் முன்பாகவும், உசன் ஜே/329 பிரிவில் கந்தசாமி கோவிலடிச் சந்தி, (மைதானத்துக்கு அருகில்) பாடசாலைச் சந்தி ஆகிய இடங்களிலும், கரம்பகம் ஜே/330 பிரிவில் பொது நோக்கு மண்டபம், கெற்பிட்டி சந்தி, சக்தி ஸ்ரோர் ஆகிய இடங்களிலும், விடத்தற்பளை ஜே/331 பிரிவில் கிராம அபிவிருத்தி சங்க (RDS) கட்டடம் , அன்ரன் வீதி, உசன் விடத்தற்பளை வீதி ஆகிய இடங்களிலும், கெற்பேலி ஜே/332 பிரிவில் கெற்பேலி அ.த.க.பாடசாலை அருகாமை , பொது நோக்கு மண்டபம் ஆகிய இடங்களிலும், எழுதுமட்டுவாழ் தெற்கு ஜே/333 பிரிவில் விழுவளை அம்மன் கோவிலடி சிவன் கோவிலடி ஆகிய இடங்களிலும், எழுதுமட்டுவாழ் வடக்கு ஜே/334 கலியாணக்குளம் சந்தி, மருதங்குளம் சந்தி, ஒட்டுவெளி நாச்சிமார் கோவிலடி ஆகிய இடங்களிலும், மிருசுவில் வடக்கு ஜே/ 335 பிரிவில் அரசடி பிள்ளையார் கோவிலடி வன்னியர் சனசமூக நிலையம், மன்னன்குறிச்சி கோவிலடி ஆகிய இடங்களிலும் கழிவுப் பொருள்களை வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றுள்ள சிலருக்கு 6 மாதங்கள் வரை அறிகுறிகள்

கொழும்பு, ஒக். 4

**கொரோனாத் தொற்றுள்ள சிலருக்கு 90 நாள்கள் முதல் 180 நாள்கள் வரையில் அறிகுறிகள் இருக்கலாம் என்று ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.**



ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு, ஒவ்வாமை மற்றும் நுண்உயிரியல் துறை பணிப்பாளரும், மருத்துவருமான சந்திம ஜீவந்தரா சுட்டிக்காட்டியுள்ளார். இதுதொடர்பில் அவர் வெளியிட்டருவிற்றர்பதிவில்உள்ளதாவது: 'கொரோனாத் தொற்றுள்ள சிலருக்கு 90 நாள்கள் முதல் 180 நாள்கள் வரையில் அறிகுறிகள் இருக்கலாம். இவற்றில் மன அழுத்தம் போன்ற அறிகுறிகள் 15 சதவீதம் வரை இருக்கும், மற்ற அறிகுறிகள் 1.5 முதல் 8 சதவீதம் வரை அதிகமாக இருக்கும். இந்த அறிகுறிகள் பெரும்பாலும் பெண்களுக்குத்தான் அவதானிக்கப்பட்டுள்ளது- என்றார். (ம-இ)

## குளவிகள் கொட்டியதில் இருவருக்கு காயம்

கிளிநொச்சி, ஒக். 4

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறுப் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தென்னைமரத்தில் இருந்து கலைந்துசென்ற பெருங்குளவிகள் தாக்கியதில் கனிகரன் சங்கவி (வயது - 17), க.சிவதாசன் (வயது - 55) ஆகியோரே காயமடைந்தனர். அவர்கள் இருவரும் தருமபுரம் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ம-113)

### நாட்டின் வான் பரப்புக்களில்

## அவதானிக்கப்பட்டது சிலந்தி வலையே!

கொழும்பு, ஒக். 4

நாட்டின் சில பகுதிகளில் வானில் பறந்துவந்த வலையைப் போன்ற அமைப்புகள் சிலந்தி வலைகளே என்று கொழும்பு பல்கலைக்கழக விண்வெளி விஞ்ஞான பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மொனராகலை, அம்பாறை, தெஹிஅத்தகண்டிய, சூரியவெள உள்ளிட்ட சில பகுதிகளில் நேற்று வலை வடிவிலான ஒன்று பறந்து வருவதை மக்கள் அவதானித்துள்ளனர். இது குறித்து நடத்தப்பட்ட ஆய்விலேயே, இந்த வலையானது சிலந்தி வலை என்பது உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

சிலந்திகள் இந்த காலப்பகுதியிலேயே முட்டை இடும் எனவும், முட்டையிலிருந்து உருவாகும் சிலந்திகள் அங்கும் இங்கும் செல்ல சிலந்தி வலையைப் பயன்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-இ)



### இந்திய வெளிவிவகாரச் செயலர்

## ஹர்ஷ்வர்தன் ஶ்ரீங்லா திருமலைக்குப் பயணம்!

கொழும்பு, ஒக். 4

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகாரச் செயலர் ஹர்ஷ்வர்தன் ஶ்ரீங்லா, திருகோணமலைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். இதன்போது, அங்குள்ள எண்ணெய்த் தாங்கித் தொகுதிகளையும் அவர் பார்வையிட்டார்.

எண்ணெய்த் தாங்கி கட்டமைப்பின் அபிவிருத்தி பணிகள் மற்றும் இலங்கை எரிசக்தி பாதுகாப்பை அதிகரிப்பதற்காக எரிசக்தி உதவியை மேலும் பலப்படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் செயலாளருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## தேவாலயங்கள் மீது தாக்குதல் அறிவிப்பு

### உண்மையை வெளிப்படுத்தும்படி எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 4

கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல் இடம்பெறலாம் என்ற அறிவிப்பு தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிறிஸ்தவ, கத்தோலிக்க தேவாலயங்கள் தாக்கப்படலாம் என்ற சர்ச்சைக்குரிய அறிவிப்புக்கள் குறித்த உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும். இனவாதக் கருத்துகள் மீண்டும் முன்னிலைக்கு வருகின்றன. தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதாகத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசு தற்போது சந்தேகத்துக்கு இடமான பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அனைத்து இனங்களும், மதங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்றிணைய வேண்டும்- என்றார். (ம)




ஐ.நா.வுக்கு கடிதம் அனுப்பிறதில கூட்டமைப்புக்குள்ள பிடுங்குபாடு வந்ததெல்லோ. முதல்ல பொதுவா ஒரு கடிதம் தான் அனுப்பிறதெண்டு இருந்தது. ஆனா போனமுறை மாதிரி 'அனுப்பிறம் அனுப்பிறம்' எண்டு அனுப்பாமலே பேய்க்காட்டின மாதிரி இந்தமுறையும் நடக்கக்கூடாது எண்டு, அந்தக் கடிதத்தைக் காட்டச்சொல்லிக் கேட்டவை. ஆனா அதை உடன காட்டாமல் இழுத்தடிச்சுத்தான், கூட்டமைப்பின்ர சட்டாம்பியார் காட்டினவர்.

அப்பதான் அதில அரசாங்கத்தை மட்டுமில்லாம புலிகளின்ர போர்க்குற்றத்தையும் விசாரிக்க வேணுமெண்டு போட்டிருந்த விசயம் வெளியில வந்திச்சு. அந்தக் கடிதத்தில போடவேண்டியதுகள் எத்தினையோ இருக்க, அதுகளைப் போடாமல், எப்பவோ செய்த தருஸ்மன் அறிக்கை வசனத்தை கொப்பி பண்ணிப் போட வேண்டிய கட்டாயமென்ன? எண்டு பங்காளியள் கடுமையாக் கேட்டவை. அந்தச் சந்தடி சாக்கோடா கூட்டமைப்பின்ர பங்காளியள், விக்னேஸ்வரன்ர கூட்டோட சேர்ந்து புறிம்பா இன்னொரு காகிதம் ஐ.நா.வுக்கு அனுப்பிட்டினம்.

இந்தக்கட்டத்தில கூட்டமைப்பு அனுப்பின கடிதத்தில எதுக்கு புலிகளை விசாரிக்க வேணும் எண்டு .எழுதினதெண்டு தமிழரசுக் கட்சி எம்.பியள் கொஞ்சப் பேருக்கு கடும் கோபம். சூமில நடந்த மீட்டிங்கில சட்டாம்பியார் கனக்க சாக்குப் போக்குச் சொன்னார். ஆனால் அதையெல்லாம் கிளிநொச்சி நாட்டாமையும், மன்னார் குறுநில மன்னரும் கேக்கிறதாயில்லை. புலியளை விசாரிக்க வேணும் எண்டதை வெட்டிப்போட்டுத்தான் கடிதம் அனுப்பலாம் எண்டு , சூமுக்குள்ளாலயே உறுமிச்சினமாம். சட்டாம்பியாருக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. உடன போட்டார் ஒரு குண்டை.

" அதெல்லாம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா சைன் வைச்சு அனுப்பியாச்சு. இனியொண்டும் வெட்ட ஏலாது" எண்டு சொல்ல, இவைக்கு ஒரே ஷொக்.

" அதென்னெண்டு எங்கட சைன் இல்லாமல் சம்பந்தர் மட்டும் தனிய சைன் வைச்சு அனுப்பினவர்?" எண்டு ஏகத்துக்கும் எகிறினாலும், ஒண்டும் செய்யமுடியாது எண்டு இவைக்கு விளங்கிட்டு.

அதால உடனேயே கூட்டமைப்பின்ர தமிழரசுக் கட்சிக்கார எம்.பிக்களும், முன்னாள் எம்.பிக்களும், இன்னும் கொஞ்சம் முக்கியமான கட்சிக்காரரும் சேர்ந்து மூண்டாவதா இன்னொரு கடிதம் எழுதி அது பெரும் பிரச்சினையானது.

இதெல்லாம் எல்லாருக்கும் தெரிஞ்ச கதை தான். இப்ப தெரியாத ஒரு கதையும் இருக்கு,

அண்டைக்கு சூம் மீட்டிங்கில " சம்பந்தன் ஐயா சைன் வைச்சு அனுப்பிட்டார்" எண்டு சட்டாம்பியார் ஒரு குண்டு போட்டவரெல்லோ. உண்மையா அந்தக் கடிதம் அதுக்கு பிறகுதான் அனுப்பப்பட்டு இருக்காம். அதைவிட அந்தக் கடிதத்தில இருந்த கன விசயங்களை முக்கியமா புலிகளை விசாரிக்க வேணும் எண்டதையும் அவர் வாசிக்கேலையாம், சட்டாம்பியார் நீட்டின காகிதத்தில சைனை வைச்சிருக்கிறார்.

இப்ப கிட்டடியில சம்பந்தரை பங்காளியள் சந்திச்சு நடந்ததுகளுக்கு நீதி கேக்கேக்க தான், சம்பந்தருக்கு தன்ர பேரை இப்பிடியெல்லாம் பாவிச்சு விளையாட்டுக் காட்டியிருக்கினம் எண்டு தெரியவந்திச்சாம். " இனி அவரை வைக்க வேண்டிய இடத்தில வைக்கிறன்" எண்டு பங்காளியளுக்குச் சொல்லிப் போட்டுத்தான், 'ஒற்றுமையா இருங்கோ' எண்டு அறிக்கை விட்டவராம். அந்த அறிக்கையின்ர ஒவ்வொரு சொல்லும் சட்டாம்பியாரை அடிக்கிற மாதிரி இருக்கெண்டு தான் சனம் கதைக்குது. பட்சியொன்றும் அறியாது பராபரமே!

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடமிருந்து கடனுக்கு எண்ணெய் கொள்வனவு

- பேச்சை ஆரம்பித்தது அரசு
- அமைச்சர் உதயகம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 4

எண்ணெய் இறக்குமதிக்கு அவசியமான நிதியைப் பெற்றுக்கொள்வதில் பெரும் நெருக்கடியை அரசு சந்தித்துள்ளதால் நீண்டகால கடனுக்கு சீனா விடமிருந்து எண்ணெயைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது.

இதனை அமைச்சர் உதயகம மன்பில தெரிவித்துள்ளார். ஆறுமாத காலத்துக்கு சீனா விடமிருந்து எண்ணெயைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சு இடம்பெறுகின்றது என்று அமைச்சர் தெரிவித்துள் ளார். சீனத் தூதுவர் ஊடாக இந் தப் பேச்சு இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, எண்ணெய் கொள்வனவுக்காக ஓமானிடமிருந்தும் 3.6 பில்லி யன் டொலரை கடனாகப் பெறும் முயற்சிகளிலும் இலங்கை ஈடு பட்டுள்ளது. இதற்கான பேச்சு களில் ஈடுபட்டுள்ளோம் என்றும் அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்தார். (த-இ)



## சிறிய வர்த்தகர்களைக்கூட கட்டுப்படுத்த முடியாத அரசு

குற்றஞ்சாட்டுகிறார் ஓமல்பே சோபித தேரர்

கொழும்பு, ஒக். 4

சுயநலம்மிக்க சிறிய வர்த்தகர்கள் குழுவைக் கூட கட்டுப்படுத்த முடியாத அரசு மீது மக்க ளுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும்? என்று ஓமல்பே சோபித தேரர் கேள்வி எழுப்பியுள் ளார். அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடி யாததன் காரணமாக அரசின் திறமை யின்மை வெளிப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தகைய நெருக்கடிக்குப் பொறுப்பேற்று முதலில் வர்த்தக அமைச்சர் பதவி விலக வேண்டும். கொரோனா வைரஸ் பெருந் தொற்றுக் காரணமாக மக்களுக்கு மிகவும் அவசரமாக உதவி தேவைப்படுகின்றது. ஜனாதிபதி வேண்டுமென்றே தனது கடமை களை நிறைவேற்றத் தவறிவருகிறார்.

தங்கள் கடமைகளை நிறைவேற்ற முடியா விட்டால் உலக நாடுகளில் அரச தலைவர்க ளும் அமைச்சர்களும் பதவி விலகுவது வழமை. அரிசி விலைகளை வர்த்தகர்கள் தீர்மானிப்பதற்கு அனுமதிக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)



## பயனாளிகளுக்கு அரிசிப் பொதிகள்

முல்லைத்தீவு, ஒக். 4

பொருண்மியம் நலிந்த 54 பயனாளிகளுக்கு புலம்பெயர் நாட்டில் வசிக் கும் குபேரன், சைலேந்திரி மற்றும் செழியன் ஆகி யோரின் நிதியுதவியில் அரிசிப்பொதிகள் வழங் கப்பட்டன.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரை ராசா ரவிகரனால் முன் னெடுக்கப்பட்டு வரும் 'வாழ்வோம் வளம்பெறு வோம்' செயற்றிட்டத்தின் 47ஆவது கட்டமானது நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்றது.

இதனூடாக, முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தீர்த்தக்கரை, சிலாவத்தை, நாயாறு ஆகிய பகுதிகளி லுள்ள54 குடும்பங்களுக்கு அரிசிப்பொதிகள் வழங்கப் பட்டன. (ஓ-ரி1,246)

படிக்காமல் கணினியில் விளையாட்டு:

## தந்தை அடித்ததால் மகன் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 4

படிக்காமல் கணினி விளையாட்டில் மூழ்கியி ருந்த மகனை, தந்தை அடித்தபோது, அது தவ றுதலாக மாணவனின் தலையில்பட்டு, மாணவன் உயிரிழந்த சோக சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

காலியில் இந்தச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில், சுரவீராச்சி கிம்ஹன விமுக்தி (வயது 16) என்ற மாணவனே உயிரிழந்தார்.

தற்போது பாடசாலைகள் நடைபெறுவதில்லை. இணையவழிக்கற் கையை மட்டுமே மாண வர்கள் நம்பியிருந்த னர். இணையவழிக்கற் கையை ஆரம்பித்த பின் னர், மாணவன் கணினி விளையாட்டுக்க ளுக்கு அடிமையாகி விட்டான். இதை அவதானித்த தந்தை, மகனுக்கு பல முறை அறிவுரை கூறிவந் துள்ளார்.

எனினும், அது பயனளிக் கவில்லை. எனினும், மாணவன் பல சமயங்க ளில் இணைய வழிக்கற் கைகளில் கலந்து கொள் வதில்லை.

இந்நிலையில் கடந்த 29 ஆம் திகதி மகன் கணினி விளையாட்டில் ஈடுபட்டி ருந்ததை அவதானித்த தந்தை இணையவழி கற்கையில் ஈடுபடுமாறு கூறியுள்ளார்.

இணையவழி விளை யாட்டை குழப்பிய வெறுப் பில், தந்தை சொல்லை கேளாமல் மகன் தனது அறைக்கு சென்றுவிட்டார். இது தந்தையை மேலும் கோபப்படுத்தியது. அரு கிலிருந்த தும்புத்தடியால் மகனை அடித்துள்ளார். ஓர் அடி, மகனது தலை யில் வீழ்ந்தது. அடி தலை யில்பட்டதும், தலைவிறைப் பதாகக் கூறிக்கொண்டு மகன் படுத்துவிட்டார்.

சிறிது நேரத்தில் அவர் மயக்கமடைந்துவிட்டார். உடனடியாக முச்சக்கர வண்டியொன்றில் ஏற்றிக் கொண்டு காலி, கராப்பிட் டிய போதனா மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தீவிர சிகிச் சைப் பிரிவில் சேர்க்கப் பட்டார்.

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மாண வனின் உயிரைக் காப் பாற்ற மருத்துவர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட் டனர்.

ஆனால் அந்த முயற்சி பயனளிக்கவில்லை. மறு நாள் காலையில் மாண வன் உயிரிழந்தார். பொலி ஸாரால் கைதான தந்தை விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## முன்பள்ளிகள் திறக்கப்படும்

கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 4

இந்தமாத இறுதிக் குள் முன்பள்ளி களைத் திறப்பதே தமது இலக்கு என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த் தன தெரிவித்துள் ளார். இலங்கை யில் கொரோனா பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட் டதையடுத்து படிப்படியாக நாட்டை மீளக் கட்டியெழுப்பவேண்டிய தேவை எமக்கு உள்ளது. அதனடிப்படையில் கட்டம் கட்டமா கப் பாடசாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதன் ஓர் அங்கமாக முன்பள்ளிகளைத் திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-இ)



## அரசுக்குள் இருந்தவாறே அரசுக்கு எதிராகச் சதி!

இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 4

அரசில் அங்கம் வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக சதி செய்கின் றனர் என இராஜாங்க அமைச் சர் ரொசான் ரணசிங்க தெரிவித் துள்ளார்.

அரச நிர்வாகத்தின் ஒரு பகுதி யாக அங்கம் வகித்தவாறே அவர்கள் அரசுக்கு எதிராக சதி செய்கின்றனர் என அவர் தெரி வித்துள்ளார்.

அரசை முன்னோக்கி கொண்டு செல்லவேண்டும் என்றால் அவ் வாறான நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக்கூட்டங்களில் அமைதியாக இருப்பவர்கள் பொதுமக்கள் மத்தியில் அர சுக்கு எதிராக உரத்த குரலில் கருத்துத் தெரிவிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் எடுத்த தீர்மானங்களை அவ்வா றானவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை என்றால், அவர்க ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என இரா ஜாங்க அமைச்சர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிப்பை எதிர்கொள்ளும் கட்டட ஒப்பந்தகாரர்கள்

**யாழ்ப்பாணம், ஒக். 4**

**அண்மையகாலத்திலேற்பட்ட விலைவாசியேற்றம் காரணமாக கட்டட மூலப்பொருள்களின் விலை இரட்டிப்பாகியுள்ளது. அதனால், பதிவுசெய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

சாதாரண ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்படும் விலைவாசியேற்றத்துக்கான கொடுப்பனவு, தற்போதைய அசாதாரண விலை அதிகரிப்பை ஈடுசெய்யக்கூடியதாக இல்லை.

இது தொடர்பாக ஒப்பந்தகாரர்களால் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசென்றபோதிலும்கூட அவர்களால் ஒப்பந்தத்தை மீறி எதுவும் செயற்படமுடியாதநிலையில் மௌனமாக உள்ளனர்.

கடந்தகால போர்ப் பாதிப்பிலிருந்து தற்பொழுதுதான் சிறு ஒப்பந்தகாரர்கள் மெது மெதுவாக மீண்டு வருகிறார்கள். அவர்கள் மீது சாதாரண நடைமுறைக்கேற்ப வகுக்கப்பட்ட நாட்டின் அபிவிருத்தித்திட்டம் என்ற நோக்குடனான ஒப்பந்தத்தை காரணமாக்காட்டி விலைஅதிகரிப்பால் ஏற்பட்ட மேலதிகமான செலவினம் திணிக்கப்படுகின்றது. இதனால் எமது பிரதேசத்திலுள்ள சிறு ஒப்பந்தகாரர்கள் தமது கையிருப்பையும் இழந்து வங்கிகளிலிருந்து பெற்றுக்கொண்ட கடனையும் மீள செலுத்த முடியாது நடுத்தெருவுக்கு வரும் நிலையேற்படும். எதிர்காலத்தில் சிறு ஒப்பந்த காரர்களையும் தொழில் வழங்குநர்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நிலையேற்படும். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த)

## சிறுவனைப் பயன்படுத்தி போதைப்பொருள் விற்பனை

கொழும்பு, ஒக். 4

மூன்றரை வயதுடைய சிறுவனைப் பயன்படுத்தி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குழுவினர் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேவல்தெணியப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் சிறுவனின் தாயும் அடங்குகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்படும்போது சிறுவனின் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 06 கிராம் போதை மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## ரிட்ஜ்வே மருத்துவமனையில் 1,542 சிறார்களுக்குத் தடுப்பூசி

கொழும்பு, ஒக். 4

கொழும்பு, ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் 12 வயது தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட ஆயிரத்து 542 சிறுவர்களுக்கு இதுவரை பைஸர் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் 150 சிறுவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என்று மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு https://lrh.health.gov.lk/ என்ற இணையத்தில் பிரவேசிப்பதன் ஊடாக நேரம், திகதியை ஒதுக்கிக்கொள்ள முடியும்.

இதேவேளை- மொனராகலை, நுவரெலியா மாவட்டங்களில் சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமானது. பொலனறுவை மாவட்டத்தில் 90 சிறுவர்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளனர். தடுப்பூசிகளை சிறுவர்களுக்கு ஏற்றுவதில் பெற்றோர் பெரும் ஆர்வம் கொண்டுள்ளனர் என்று பொலனறுவை மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சம்பத் இந்திக்க தெரிவித்துள்ளார். (த-இ)

## சிறைகளிலுள்ள கைதிகளை இன்றிலிருந்து பார்க்கலாம்

கொழும்பு, ஒக். 4

சிறைச்சாலைக் கைதிகளை உறவினர்கள் சந்திப்பதற்காக விதிக்கப்பட்டிருந்த தடை இன்று திங்கட்கிழமை தொடக்கம் நீக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த ஓகஸ்ட் மாதம் 07 ஆம் திகதியிலிருந்து சிறைச்சாலையிலுள்ள கைதிகளை உறவினர்கள் சந்திப்பது தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்தது.

தொற்றுநோய் முற்றிலுமாக ஒழிக்கப் படாததால், அரசால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி உறவினர்களுக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (த-இ)

## வீடு புகுந்த குழு குடும்பத் தலைவரை அடித்துக் கொன்றது

கொழும்பு, ஒக். 4

வீடொன்றினுள் பலவந்தமாக நுழைந்த குழு ஒன்று அங்கிருந்த நபர் ஒருவரை அடித்துக்கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பதுளை, லிதமுல்லப் பகுதியில் உள்ள வீடொன்றிலேயே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரும்புக் கம்பியால் குறித்த நபர் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலில் பலத்த காயமடைந்த நபர் பதுளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதே பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய ஒருவரே கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பதுளை பகுதியைச் சேர்ந்த 21, 24 மற்றும் 31 வயதுடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-இ)

## நாளாந்தம் 5,000 சுற்றுலாவிகள்: வரவழைக்க அரசு நடவடிக்கை



நவம்பர் மாதம் தொடக்கம் நாளாந்தம் சுமார் 5 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

புதிய சுகாதார வழிகாட்டல்களைக் கடைபிடிக்கும்போது இலக்கை அடையத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். புதிய கொரோனா சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க முடியும். உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் இன்னும் நடைமுறையில் உள்ளன. அவர்கள் இலக்கை அடைய சில சவால்களை எதிர்கொள்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

## வறிய மாணவர்களுக்கு பால்; விவசாய அமைச்சு நடவடிக்கை

வறிய மாணவர்களுக்கு பால் வழங்கும் நோக்கில் அவர்களது நலன்கருதி சிறிய அளவிலான 6 பால் பதப்படுத்தும் நிலையங்களை அமைக்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு ஒரு குவளை பால் வழங்கும் நோக்கில் இந்த நிலையங்கள் அமைக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். குறித்த பால் பதப்படுத்தும் நிலையங்கள் 13.9 மில்லியன் யூரோ செலவில் பிரான்ஸ் அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு பால் பதப்படுத்தும் நிலையத்தில் இருந்தும் ஒரு நாளைக்கு 5 ஆயிரம் லீற்றர் வீதம் இந்த ஆறு நிலையங்களில் இருந்து ஒரு நாளைக்கு 30 ஆயிரம் லீற்றர் பால் பதப்படுத்தப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

## தேசிய மட்டத்துக்குத் தெரிவான முல்லையின் நான்கு மாணவர்கள்

முல்லைத்தீவு, ஒக். 4

மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடான தொழில்வழிகாட்டல்தொடர்பான எண்ணக் கருவினை மக்களிடையே கொண்டு செல்வதற்காக நடப்பாண்டிலிருந்து "தொழில் வழிகாட்டல் வாரத்தை" ஒக்ரோபர் இன்று தொடக்கம் 10 ஆம் திகதிவரை நடத்துவதற்கு மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் குறித்த தொழில் வழிகாட்டல் வாரத்தை முன்னிட்டு இடைநிலை (தரம் 09,10,11) பாடசாலை மாணவர்களிடையே நிகழ்நிலை ஊடாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து க.பொ.த. சாதாரணதரத்தைச் சேர்ந்த 4 மாணவிகள் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தேவரஞ்சன் கோகுலறூபி, முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எம்.அபிசாயினி, குமுழமுனை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். பவித்ரா, கணேஸ்குமார் தமிழினி ஆகிய மாணவிகளே இவ்வாறு தேசிய மட்ட போட்டிக்குத் தகுதி பெற்றவர்களாவர். (ஓ-ரி1-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தில் போராட முடியவில்லை புலம்பெயர் தமிழர்கள் உதவவேண்டும்

**முல்லைத்தீவு, ஒக். 4**

**தாயகத்தில் மக்கள் போராட்டங்கள் நடத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது என்பதை புலம்பெயர் தமிழர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்று நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வாசுகி சுதாகர் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா காலத்தில் தொழில் வாய்ப்பை இழந்த மக்களுக்கு அண்மையில், நிவாரண உதவி வழங்கப்பட்டது. அதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கின்றது. முல்லைத்தீவு மாவட்டம் இறுதிப்போரில் பெரும் அழிவுகளைச் சந்தித்து காணாமல் ஆக்கப்பட்டவர் மற்றும் உறவுகளை இழந்த வலிகளுடன் தங்கள் வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுசெல்லமுடியாத நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் போருக்குப் பின்னர் கொரோனா இடர் இன்னும் மோசமான நிலைக்கு மக்களைத் தள்ளியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரை தேடி போராடிக்கொண்டிருக்கும் இந்த மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படும் என்ற செய்தி மிகவும் கவலை கொள்ளவைக்கின்றது. கொரோனா இடர் காலத்திலும் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அவர்களுக்கான அச்சுறுத்தல்கள் அரச பயங்கரவாத வன்முறை நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. போராட்டங்களை முன்னின்று நடத்துவதற்குக் கூட பயமுற்ற நிலையில் இருக்கின்றார்கள். புலம்பெயர் தமிழர்கள் இதனை விளங்கிக்கொள்ளவேண்டும். நாங்கள் எதுவும் அற்ற நிலையில் போராட்டங்களை செய்யமுடியாமல் இறந்த ஆத்மாக்களுக்கு அஞ்சலிகூட செலுத்த முடியாமல் இருக்கின்றோம்.

போராட்டங்கள் நடத்தமுடியாத் துர்ப்பாக்கிய நிலை இங்கு இருக்கின்றது என்பதை புலம்பெயர் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, அவர்களுக்கான உதவிகளையும் போராட்டத்தின்மூலம் வலுச்சேர்க்கக்கூடிய உதவிகளையும் புலம்பெயர் தமிழர்கள் ஏற்படுத்தவேண்டும். - என்றார். (கு-19)

## கற்பிட்டி கடலோரத்தில் 702 கிலோ மஞ்சள் மீட்பு

புத்தளம், ஒக். 4

கற்பிட்டி குடாவ கடலோரத்தில், 702 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப் ரக வாகனம் ஒன்றைக் கடற்படையினர் சோதனை செய்தனர்.

இதன்போது, 702 கிலோ கிராம நிறையுடைய 20 மூடைகளில் பொதி செய்யப்பட்ட உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டது.

மஞ்சள் மூடைகளுடன் வாகனத்தைக் கைப்பற்றிய கடற்படையினர், சந்தேகத்தின் பேரில் ஒருவரையும் கைது செய்தனர்.

உலர்ந்த மஞ்சள் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ஒ-4)

## மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள்

கிளிநொச்சி, ஒக்.4

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

பளை இளைஞர் அணி மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஊடக அமையம் ஆகியவை இணைந்து விசேட தேவைக்கு உட்பட்ட மாணவர்களுக்கு தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளன. (ச-113)



## வீதியால் பயணித்தவர்களை வழிமறித்து வெட்டிய குழு

### வவுனியா கோவில்குளம் பகுதியில் சம்பவம்

வவுனியா, ஒக். 4

வவுனியா, கோவில்குளம் பகுதியில் நின்றிருந்த இளைஞர்குழுவினர், வீதியால் பயணித்தவர்களை வழிமறித்து வாள் மற்றும் கோடரிகளால் தாக்கியுள்ளனர். அதனால் காயமடைந்தவர்களில் இருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. மதுபோதையில் நின்றிருந்த அந்தநபர்கள் வீதியால் செல்பவர்களைத் தாக்கியதுடன் வீடுகள் சிலவற்றுக்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தவர்களையும் தாக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. விசாரணை நடைபெறுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-110)

## புதையல் தோண்ட முற்பட்டவர்கள் மீது முறைப்பாடு

கிளிநொச்சி, ஒக். 4

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சார்வெளிப் பகுதியில் புதையல் தோண்டும் முயற்சி இடம்பெறுகிறது என அப்பகுதி மக்களால் பொலிஸாருக்கு முறைப்பாடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பளை பொலிஸார் அங்கு புதையலுக்காக தோண்டப்பட்ட குழி ஒன்றை பார்வையிட்டுள்ளனர். எனினும் இது குறித்து சந்தேக நபர்கள் எவரும் கைதாகவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-113)



## உலர் உணவு பொதிகள் வழங்கல்

முல்லைத்தீவு, ஒக். 4

பொருண்மியம் நலிந்த 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில், காந்தி இல்லம் நியூசிலாந்து தமிழ் நிதியத்தின் நிதிப்பங்களிப்பில் வன்னி ஹோப் ஆஸ்திரேலிய நிறுவனம் ஊடாக, இந்த உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கனகரத்தினபுரம், பேராறு ஆகிய கிராமங்களில் வசிக்கும் 100 குடும்பங்களுக்கு, தலா ஆயிரத்து 550 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஒ-ரி. 246)

## இந்து மயானம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

சுழிபுரம், திருவடி நிலை இந்து மயானம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. அண்மையில் அமரத்துவம் அடைந்த விக்ரோறியா கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் இந்திரராஜாவின் நினைவாக இந்த மயானம் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த மயான புனரமைப்பு அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. குறித்த அபிவிருத்தியை மேற்கொள்ளும் குழுவினர் திருவடிநிலை மயானத்துக்கு களப்பயணம் ஒன்றை மேற்கொண்டு புனரமைப்பு தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். (ச-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கூட்டமைப்பின் ஆன்மா எங்கே?


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையோடு செயற்பட வேண்டுமென்று அறிக்கை விட்டிருக்கிறார் கூட்டமைப்பின் தலைவர்இரா.சம்பந்தன். அண்மைக்காலமாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் பற்றி, விரும்பத்தகாத கருத்துகளை அதே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், பொது வெளியில் பரப்பி வந்தார்கள். இதனால் வெகுண்டெழுந்த பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்பின் தலைவரிடம் நேரடியாகச் சென்று, ஒரே கூட்டுக்குள் இருந்து கொண்டே இப்படி குழிபறிக்கலாமா? என்று நியாயம் கேட்ட பின்னணியிலேயே, 'ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்' என கூட்டமைப்பின் தலைவர் அறிக்கை விட்டுள்ளார்.

பொதுவாகவே மக்களின் பிரச்சினைகள், முக்கியமான முடிவுகள், கட்சியின் தீர்மானங்கள், அதிகாரத்தின் அராஜகப் போக்குக்கு எதிரான கருத்துகள் என்பவற்றை வெளிப்படுத்துவதாகவே கூட்டமைப்பின் தலைவர் அறிக்கைகளை வெளியிடுவது வழக்கம். ஆனால், இப்போது என்னவென்றால், உட்கட்சிப் பூசலைக் களைந்து, ஒற்றுமையாக நடவுங்கள் என்று– தன் கூட்டமைப்பில் இருப்போரைக் கேட்டுக் கொள்வதற்குக் கூட அறிக்கைவிட வேண்டிய கட்டாயத்தை சம்பந்தருக்கு சிலர் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கூட்டமைப்பு என்பது தனியே ஒரு அரசியல் கூட்டு மாத்திரமல்ல. அதுதான் எஞ்சிக் கிடக்கும் எமது தமிழினத்தின் உரிமைத் தாகத்துக்கான இறுதி அடையாளம். ஆயுதப் போராட்டம் அழிந்து போனாலும், எங்கள் மக்களுக்கான அரசியல் போராட்டம் நீர்த்துப் போகாமல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். அதுவரை காலமும் கொள்கைரீதியாக தம்மோடு முரண்பட்ட தமிழ் அமைப்புக்களைக்கூட மக்களின் நலனுக்காக 'தமிழ்த் தேசியம்' என்ற பொதுப்புள்ளியில் இந்தக் கூட்டமைப்பில் புலிகள் இணைத்ததே அதற்காகத்தான். எனவேதான் அதுவரை எதிரும் புதிருமாக அரசியல் செய்துகொண்டிருந்த அமைப்புகளும், கட்சிகளும் ஒரேகுடையின் கீழ் தமிழ் மக்களின் ஏக அரசியல் பிரதிநிதிகளாக மாற முடிந்தது. விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சி என்ற ஒரே காரணத்துக்காகத் தான், கூட்டமைப்பு எத்தனையோ கூத்துக்களை ஆடியிருந்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது மக்களும் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து வந்தார்கள்.

ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல. தமிழ்த் தேசியம் என்பதுதான் கூட்டமைப்பின் ஆன்மா. இப்போது அந்த ஆன்மா கூட்டமைப்பில் உள்ளதா என்றால் கேள்விக் குறியே. கூட்டமைப்பு எதற்காக உருவாக்கப்பட்டது? எவரால் உருவாக்கப்பட்டது? என்பதெல்லாம் தெரியாமல் கட்சிக்குள் வந்தவர்கள், தம்மிஷ்டத்துக்காக கட்சியின் கொள்கைகளை உதறிவிட்டார்கள். அதனால் தான் சிலவேளைகளில் கூட்டமைப்பை விடவும், சிங்களப் பெருந்தேசியக் கட்சிகள் பரவாயில்லை என்ற கையறு நிலைக்கு போய், மக்களே குழம்பிப் போனார்கள். என்னதான் அள்ளிக் கொடுத்தாலும் அவற்றுக்கெல்லாம் மசியாமல், தமிழ்த்தேசியத்துக்காக நின்ற மக்கள், கடந்த தேர்தலில் 'அபிவிருத்திக் கனவை' நம்பி வாக்களித்து ஏமாந்ததும் இதனாலேயே தான். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த 'தமிழ்த்தேசியத்தின்' ஆன்மா இப்போது விக்னேஸ்வரனின் கட்சிக்கும், தமிழ்த் தேசிய முன்னணிக்கும் கூடு பாய்ந்து விட்டது. அதனைச் சரியாக மக்கள் இனங்கண்டு கொண்டமையால் தான் அந்தக் கட்சிகள் கடந்த பொதுத்தேர்தலில் கூட்டமைப்புக்குச் சவால் விடும் வகையில் வாக்குகளையும், ஆசனங்களையும் பெறமுடிந்தது.

இப்போது 'தமிழ் மக்களின் ஏகபோக அரசியல் கட்சி' என்று கூட்டமைப்பு மார்தட்ட முடியாத நிலை. வீட்டுச் சின்னத்தில் தும்புத்தடியை நிறுத்தினால் கூட வெற்றி பெற்றுவிடும் என்ற காலமெல்லாம் மலையேறிவிட்டது. இந்தச் சமயத்தில் கூட்டமைப்பை இன்னமும் சிதிலப்படுத்தும் வகையில் சிலர் காரியமாற்றி வருகின்றனர். இத்தகைய உட்குத்துகளின் விளைவுகளாலேயே கூட்டமைப்பு இப்போது குற்றுயிராகக் கிடக்கின்றது. சொந்தக் கட்சிக்குள்ளேயே ஆளுக்காள் குதறுப்படுகையில், எப்படி பொது எதிரியான சிங்களப் பெருந்தேசியத்தின் தமிழர் நலனுக்கு எதிரான நகர்வுகளைத் தடுக்க முடியும்? கட்சியின் உள்ளகக் குத்துவெட்டுக்களை அடக்குவதற்கு கூட அறிக்கை விடுமளவுக்கு வங்குரோத்துநிலையை கூட்டமைப்பு அடைந்துவிட்டது. ஆனால், இந்தநிலை கூட்டமைப்பு உடையவேண்டும், தாம் அதன் தலைமைக் கதிரையை அடைய வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு வேண்டுமானால் உவப்பாக இருக்கலாம். ஆனால், தமிழ்த் தேசியத்தை தாகிப்பவர்களுக்கும், தங்கள் விடிவுக்காக ஏங்கும் மக்களுக்கும் கூட்டமைப்பின் பிளவுகள் வேதனையையே தரும். எனவே தங்கள் சுயநல அரசியல் வேலைகளைதூக்கிப் போட்டுவிட்டு, மக்களுக்காக தமிழ்த் தேசியம் என்ற பொதுப்புள்ளியில் கூட்டமைப்பு பலம் பெற வேண்டும். அதுவே காலத்தின் கட்டாயமும் கூட.




# நாட்டில் எவ்வேளையிலும் தாக்குதல் நடக்கக் கூடும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக். 4**

**இலங்கையின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து இறுக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஐ.எஸ். கொள்கையைக் கொண்டவர்கள் நாட்டில் இருக்கும்வரை எவ்வேளையிலும், எவ்வாறானதொரு தாக்குதலும் நடத்தப்படலாம் என கலகொட அத்தே ஞானசார தேரர் கூறியதே உண்மை. அதன்படி நாட்டில் எவ்வேளையிலும், எவ்வாறானதொரு தாக்குதலும் நடத்தப்படலாம் என்பதால் அதுகுறித்து தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் இது தொடர்பாக ஆராய்கிறோம். நாட்டில் யாரிடம் ஐ.எஸ். கொள்கை இருக்கின்றது என்பது எங்களுக்குத் தெரியாது. இஸ்லாமிய ராஜ்ஜியம் உருவாக்கும் பயணத்தில் சாதாரண தமிழ் மக்கள் மற்றும் சிங்களவர்களை ஐ.எஸ். கொள்கைக்குள் இணைக்க முடியாது. முஸ்லிம் மக்களை மாத்திரமே இலகுவாக ஐ.எஸ் கொள்கைக்குள் இணைக்க முடியும். ஆகவே, புலனாய்வுத் துறையைப் பயன்படுத்தி, தாக்குதல்கள் நடத்தப்படலாமா? போதனைகள் முன்னெடுக்கப்படுகின்றவா? என்பது குறித்து நாங்கள் தொடர்ந்து ஆராய்கிறோம். இது தேசிய பாதுகாப்புக்காகவே முன்னெடுக்கப்படுகின்றது. இதனை, முஸ்லிம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் என்ற எண்ணுவது தவறானது. எனினும், ஐ.எஸ் கொள்கையை இல்லாதொழிக்க முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பு தேவை. ஒரு நபரால் முழு நாட்டையும் சீர்குலைக்க முடியும் என்பதை முஸ்லிம் மக்கள் சிந்திக்க வேண்டும்- என்றார். (ம-இ)

# சஜித்துக்குத் தேவையானால் தனித் தேர்தலை நடத்தட்டும்

## மாகாண சபைகள் அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஒக்.4
நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த முடியாது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.
தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.
நேற்று தம்புள்ளயில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் இது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது விரைவாகத் தேர்தலை நடத்த முடியாது. தேவையாயின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவருக்கென தனியாக ஒரு தேர்தலை நடத்திக் கொள்ளட்டும் என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்**: குழந்தைகளின் கல்வி விடயத்துக்காகச் செலவுகள் சற்றுக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். வேலையில் கவனமும், விழிப்புணர்வும் அவசியம் தேவை.

**இடபம்**: மனதில் உற்சாகம் ஏற்படுத்தும் செயல் ஒன்று நடைபெறும். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய நற்செய்தி ஒன்று உண்டு. பண விடயத்தில் கவனம் தேவை. நோய்கள் நீங்கும்.

**மிதுனம்**: எதிரி ஒருவரால் இருந்த மறைமுகத் தொந்தரவு முடிவுக்கு வரும். உறவினர்களிடம் கவனம் தேவை. பேச்சில் நிதானம் அவசியம். முகத்தில் பொலிவு கூடும்.

**கடகம்**: யாருக்கும் கையெழுத்துப் போட்டு பணம் வாங்கிக் கொடுக்காதீர். சுறுசுறுப்பும் உற்சாகமும் அதிகரிக்கும். பணிகள் விரைந்து முடியும். நகை போன்றவற்றை கவனமாக வைத்துக்கொள்வது நல்லது.

**சிம்மம்**: பெரிய அளவில் முதலீடு செய்ய வேண்டாம். நிம்மதியான நாள். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம். மூன்றாவது நபர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

**கன்னி**: இளம் வயதினருக்கு மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறும். செலவு அதிகமாக இருந்தாலும் வரவும் அதிகரித்து நிம்மதி தரும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**துலாம்**: நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும். பணியாளர்கள் உயரதிகாரிகளிடம் பேசும்போது கவனம் தேவை. குடும்பச்சுமை குறையும். செலவு சற்றே அதிகரிக்கும்.

**விருச்சிகம்**: பொருளாதாரப் பிரச்சினை அகல நண்பர்கள் வழிகாட்டுவர். குடும்பத்தினருடன் கலகலப்பாகப் பேசி மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருளை வாங்குவீர்கள்.

**தனுசு**: கற்பனைப் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டு கவலைப்பட வேண்டாம். மனதுக்கு நெருங்கியவர்களின் ஒத்துழைப்பு கிடைத்து மகிழும் நாள்.

**மகரம்**: உங்கள் நலம் விரும்புவோரைப் பகைத்துக்கொள்ளாதீர்கள். புதிய வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள். காணாமல் போன பொருள் கைக்கு வரும்.

**கும்பம்**: உறவினர்கள் இடையே ஒற்றுமை பலப்படும். மகிழ்ச்சி கூடும். நண்பர்கள் சந்திப்பு திடீரென்று நிகழ்ந்து உற்சாகம் கூட்டும்.

**மீனம்**: வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றி அமைப்பீர்கள். எப்போதோ எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். மகிழ்ச்சியான சம்பவமொன்று நடைபெறும். சமூகத்தில் மதிப்பு மரியாதை உயரும்.

## அரசியலில் இருந்து பிலிப்பைன்ஸ் அதிபர் ரொட்றிக்கோ விலகல்

மணிலா, ஒக். 4

உலகில் பல்வேறு சர்ச்சைகளுடன் தொடர்புடையவராக இருந்த பிலிப்பைன்ஸ் அதிபர் ரொட்றிக்கோ டுடேர்தே அரசியலில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார். அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கப்போவதில்லை என்று நேற்று அவர் அறிவித்தார்.

இது குறித்து றொட்றிக்கோ டுடேர்த்தே தெரிவிக்கையில், 'பிலிப்பைன்ஸ் மக்கள் நான் அதிபர் பதவிக்குத் தகுதியானவர் என்று நினைக்கவில்லை. இனியும் நான் அந்தப் பதவியில் இருப்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானதாக அமையும். அதனால் நான் எனது ஓய்வை அறிவிக்கிறேன்' என்று கூறியுள்ளார். (ம)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 . 09 . 1944



மறைவு 04 . 09 . 2021

**அமரர் சண்முகம் நித்தியானந்தன்**

(ஓய்வுபெற்ற அலுவலர் - அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்)

அன்போடும், பண்போடும்
பாரினில் வாழ்ந்தீர்
அமைதியாய் பேசியே
அனைவர் உள்ளங்களையும் கவர்ந்தீர்
பண்புடை மாந்தராய்
பாரினில் நாம் வாழ வழிகாட்டினீர்
விரைவினில் விண்ணகம் சென்றுவிட்டீர்
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

117, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் — குடும்பத்தினர்

# ஆப்கான் எல்லையில் தற்கொலைப் படை!

## தலிபான்கள் அதிர்ச்சிகர அறிவிப்பு



காபூல், ஒக். 4

**ஆப்கானிஸ்தான் எல்லையில் தற்கொலைப் படையை நிலைநிறுத்துவதற்குத் தலிபான்கள் தீர்மானித்துள்ளனர். முதல்கட்டமாக சீனா, தஜிகிஸ்தான் எல்லையில் இந்தப் படையினர் நிறுத்தப்படவுள்ளனர்.**

ஆப்கானிஸ்தானின் படாக் ஷான் மாநிலம் சீனா மற்றும் தஜிகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளது. தற்கொலைப் படையை நிறுத்தும் திட்டம் தொடர்பில் படாக் ஷான் மாநிலத்தின் ஆளுநர் முல்லா நிஸார் தெரிவிக்கையில், 'படாக் ஷான் மாகாணத்தில் சீனா, தஜிகிஸ்தான் ஒட்டிய எல்லைப் பகுதியில் தற்கொலைப் படை நிலைநிறுத்தப்படும். வடகிழக்குப் பகுதியில் இவர்கள் நிறுத்தப்பட்டுவார்கள். இந்தப் படைக்கு லஷ்கர் இ மன்சூரி என்று பெயர் சூட்டியுள்ளோம். முதற்கட்டமாக படாக்ஷானில் பணியமர்த்தப்படும் இவர்கள் படிப்படியாக நாட்டின் அனைத்து எல்லைகளிலும் நிறுத்தப்படுவார்கள். இந்தத் தற்கொலைப் படையினர் மட்டும் இல்லாவிட்டால் ஆப்கானில் இருந்து அமெரிக்கப் படைகளை விரட்டியது சாத்தியமாகி இருக்காது. இவர்கள் துணிச்சலுடன் வெடிப்பொருள் நிறைந்த ஆடைகளை அணிந்துகொண்டு ஆப்கானில் இருந்த அமெரிக்கத் தளங்களைத் தாக்கி அழித்தவர்கள். இவர்களுக்கு பயமென்பதே கிடையாது. அல்லாவுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்' - என்றார். (ம)

## 'மிங்க்' வகை கீரிகளுக்கு கொரோனாத் தடுப்பூசிகள்

### பின்லாந்து முடிவு



ஹெல்சிங்கி, ஒக். 4

மிங்க் என்னும் ஒருவகைக் கீரிகளிடையே கொரோனா தீவிரமாகப் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளதை அடுத்து அந்தக் கீரிகளுக்கு கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்த பின்லாந்து அரசு முடிவெடுத்துள்ளது.

டென்மார்க், பின்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் மிங்க் பரவலாகக் காணப்படுகின்றது. இது சாதுவான உயிரினம். இவற்றின் அடர்த்தியான ரோமத்தைக் கொண்டு குளிருக்கு இதமான ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. மிங்க் கீரிகளிடம் இருந்து புதிய வகை கொரோனா வைரஸ் பரவுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்தே பின்லாந்து அரசு தனது நாட்டில் உள்ள அனைத்து மிங்க் கீரிகளுக்கும் கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்தத் தீர்மானித்து அதைச் செயற்படுத்தும் பணியில் இறங்கியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தகுதியுடையோருக்கே கொரோனாத் தடுப்பூசி

தென்மராட்சி.ஒக்.4

12 வயது தொடக்கம் 19 வயது வரையான சிறுவர்களில் தெரிவு செய்யப்பட்ட மற்றும் தகுதியுடையவர்களுக்கே கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படுகின்றது.

எனவே பெற்றோர் தடுப்பூசி செலுத்தும் நிலையங்களுக்கு அலைய வேண்டாம் என்று மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக மருத்துவமனைப் பொறுப்பதிகாரி தெரிவிக்கையில்; நோய் எதிர்ப்புச் சக்கி குறைபாட்டு நிலை, வேறு நோய் நிலைமைகளால் ஏற்பட்ட நோய் எதிர்ப்புக் குறைபாடு, குருதியுடன் தொடர்புடைய நோய் நிலை உள்ளவர்கள், அகஞ்சுரப்புக்கள் தொடர்பான நோய் நிலைமைகள், நாட்பட்ட நரம்பியல் குறைபாடுகள், பிறப்பில் ஏற்பட்ட மரபணுக் குறைபாடு உள்ளவர்கள், நாட்பட்ட இதய நோய் நிலைமைகள், சுவாச நோய் நிலைமைகள், சிறுநீரகத் தொகுதியுடன் தொடர்புடைய நோய் நிலைமைகள், உணவுக்கால்வாய் மற்றும் ஈரல் தொடர்பான நோய் நிலைமைகள், மூட்டுவாத நோய் நிலைமைகள், உளநலப் பிரச்சினைகள் உள்ளவர்கள், வேறு ஏதாவது குறிப்பிட்ட நோய் நிலைமைகளுக்காக குழந்தை நல மருத்துவ நிபுணர் அல்லது பொது மருத்துவ நிபுணரால் தடுப்பூசிக்காகப் பரிந்துரைக்கப்படுபவர்கள் ஆகியோருக்கே தடுப்பூசி செலுத்தப்படுகின்றது-என்றார்.

(ஒ-4-159)

# கசிப்பு விற்பனை மூவருக்கு தண்டம்

கிளிநொச்சி, ஒக்.4

கசிப்பு விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவருக்கு கிளிநொச்சி நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், கசிப்பை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த மாதம் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் 10 போத்தல் கசிப்பை தன் உடைமையில் வைத்திருந்தார் என்பதை நீதிமன்றில் ஒப்புக் கொண்டார். அவருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அதே போன்று தலா ஒவ்வொரு போத்தல் கசிப்பை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

(ஒ-4-6)




# வர்த்தக நிலையங்களில் தடுப்பூசி அட்டை சோதனை

## சுகாதாரப் பிரிவினர் களத்தில்

தென்மராட்சிப் பிரதேசத்தில் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், கொரோனாத் தடுப்பூசி செலுத்தியமைக்கான அட்டை வைத்திருக்க வேண்டியது கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தை போன்ற இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடுவதால் தொற்றுப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனையில் ஈடுபடும் வேளையில், தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டையின்றி எவரும் அடையாளம் காணப்பட்டால், அந்த வர்த்தக நிலையங்கள் மூடப்படும். அங்கு பணியாற்றுவோர், அங்கு பொருள்களைக் கொள்வனவு செய்வோர் என அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர். எனவே இதுவரை தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில், பிரதி திங்கட்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ஆடுகளுக்கு ஆபத்து!



மருத்துவர் திருமதி அமுதா பிரபாகரன்
விலங்கு புலனாய்வு அதிகாரி,
யாழ்ப்பாணம்.

தற்போது யாழ். மாவட்டத்தில் 'லிஸ்ரியோசிஸ்' என்னும் ஒரு நோய் ஆடுகளில் பரவிக் கொண்டிருக்கின்றது. இது listeria monocytogenes எனப்படும் ஒருவகை பக்றீரியாவால் ஏற்படுகின்றது. இறந்த விலங்கின் மாதிரிகள் அனுப்பப்பட்டு பேராதனையில் குறித்த நோய் நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலேயே இப்போதுதான் முதன்முதலாக விஞ்ஞானபூர்வமாக இந்த நோய் கண்டறியப்பட்டுள்ளது.

அழுக்கான மண், பழுதடைந்த வைக்கோல், தரமற்ற உணவு என்பன காரணமாக இந்த நோய்நிலை ஏற்படுகின்றது. அதேநேரம் ஏனைய விலங்குகள் மூலமாகவும், புலம்பெயர் பறவைகள் மூலமாகவும், புறாக்கள் மூலமாகவும் இந்த நோய் பரவலடைய வாய்ப்புக்கள் அதிகம். சட்டவிரோதமாகக் கொண்டுவரப்படும் விலங்குகளுக்கு இந்த நோய்நிலை இருந்தால் அதன்மூலம் மற்றைய விலங்குகளுக்கும் பரவும் நிலை காணப்படுகின்றது.

## நோய் அறிகுறிகள்

ஆடுகளில் இந்தநோய் ஏற்பட்டவுடன் பின்வரும் நோய் அறிகுறிகள் தென்படும். காய்ச்சல், சோர்வு, பசியின்மை, நாசிவெளியேற்றம் (மூக்குவடிதல்), உமிழ்நீர் தொடர்ச்சியாகச் சுரத்தல், முக முடக்கம், நாக்கை வளைத்து நீட்டல், விலகிய முகவாய், தலைசுற்றல், உணவுப் பதார்த்தங்கள் வாய்க்குள்ளிருந்து வெளித்தள்ளல் ஆகியன அந்த அறிகுறிகளாக அமைகின்றன. அத்துடன் கர்ப்பமடைந்த ஆடுகள் குறைப்பிரசவம் செய்யவும், பாலூட்டும் ஆடுகளில் மடி அழற்சி ஏற்படவும் வாய்ப்புக்கள் உள்ளன.

நோய் ஏற்பட்டு 3 - 5 நாள்களில் ஆடுகள் ஒரு பக்கத்தில் எழும்ப முடியாமல் படுத்திருக்கும். சிகிச்சையளிக்காவிடின் அடுத்த ஓரிரு நாள்களில் இறந்துவிடும். அதேநேரம் நோயின் ஆரம்ப நிலையில் ஆடுகளை அவதானித்து உச்சக்கட்டக் கவனத்துடன் உயர்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகளுடன் சிகிச்சை வழங்கினால் ஆடுகளைக் காப்பாற்ற முடியும். அவ்வாறு காப்பாற்றப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்துடன் அதிக கவனமெடுத்து உள்ளக கவனிப்பு முறையில் சிகிச்சை செய்வதனூடாகவும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளைக் காப்பாற்றமுடியும். மேற்குறித்த சிகிச்சை முறைகளுக்கு இலங்கை போன்ற நாடுகளில் பண்ணையாளர்களுக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுகின்றமையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டிய விடயமாக அமைகின்றது.

## நோய் ஏற்பட்ட ஆடுகளைப் பாதுகாத்தல்

1. நோய் ஏற்பட்ட ஆடுகளை மற்றைய ஆடுகளிலிருந்து வேறாக்கிப் பராமரித்தல் வேண்டும்.
2. நோய் ஏற்பட்ட ஆடுகள் உள்ள பண்ணையாளர்கள் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பக்கூடாது.
3. நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் காலந்தாழ்த்தாது உரிய சிகிச்சையை தங்களது பிரதேச கால்நடை வைத்தியரின் உதவியுடன் ஆரம்பிக்க வேண்டும்.
4. தூய சுத்தமான உணவும் நீரும் வழங்கப்பட வேண்டும்.
5. பண்ணை நிலங்கள், உணவுநீர் வழங்கும் பாத்திரங்கள் என்பன கிருமிநீக்கம் செய்யப்படல் வேண்டும்.
6. பண்ணையை எப்போதும் சுத்தமாகப் பேணவேண்டும்.

## நோய் ஏற்பட முன் ஆடுகளை பாதுகாத்தல்

1. பண்ணைகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணவேண்டும்.
2. தரமான சைலேச் தயாரித்து வழங்குவதன் மூலம் பக்றீரியாப் பெருக்கத்தைத் தடை செய்யலாம்.
3. நோய் ஏற்படும் காலப்பகுதியில் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல் புற்கள், குழைகளை வெட்டி வழங்க வேண்டும். உணவுகள் மண்ணுடனும் மலத்துடனும் தொடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
4. பக்றீரியா 3 மாதங்கள் வரை ஆட்டின் கழிவுகளில் வாழும் தன்மை கொண்டது. எனவே கழிவுகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும்.
5. பண்ணையாளர்களிடம் இதுபற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தல் வேண்டும்.

## மனிதர்களுக்கு பரவுமா?





இது ஆடுகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் அபாயம் காணப்படுகின்றது. இருப்பினும் மனிதர்களுக்கு மிக அரிதாவே பரவுகின்றது.

புள்ளிவிவரங்களின்படி ஒரு மில்லியன் மக்கள் தொகையில் 12 மனிதர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனக் காட்டப்பட்டுள்ளது. பெரும்பாலும் பண்ணை விலங்குகளுடன் நேரடித் தொடர்பில் இருக்கும் பண்ணையாளர்கள், விலங்கு மருத்துவர்கள் கொல்களத்தில் பணிபுரிபவர்கள், பலவீனமான நிர்ப்பீடணத் தொகுதி உள்ளவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் போன்றவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

மனிதர்களுக்கு இந்த நோய் ஏற்படின் தலையிடியுடன் கூடிய காய்ச்சல், வாந்தி, குமட்டல், வயிற்றோட்டம், தசைப்பிடிப்பு என்பன ஏற்படும். கிருமிகள் மூளையை அடைவதனால் மூளைக் காய்ச்சலும் ஏற்படும். அத்துடன் குறைப்பிரசவம் அல்லது குறைபாடு உடைய குழந்தை பிறக்கும் வாய்ப்பும் உண்டு.

> பக்றீரியா 3 மாதங்கள் வரை ஆட்டின் கழிவுகளில் வாழும் தன்மை கொண்டது. எனவே கழிவுகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும்.



## மனிதர்களுக்கு நோய் ஏற்படாமல் இருக்க....

1 . நன்றாக சமைத்த உணவுகளை உண்ணல் வேண்டும்.
2 . பழங்கள், காய்கறிகளை மேல்தோலை சீவி ஓடும் நீரில் நன்றாகக் கழுவவேண்டும்.
3 . பச்சை இலைகள், மரக்கறிகள் என்பவற்றை வினாகிரி கொண்டுகழுவிய பின் ஓடும் நீரில் கழுவவேண்டும்.
4 . நோய் ஏற்பட்ட ஆடுகளிலிருந்து பெறப்படும் உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.
5 . இந்தப் பக்றீரியாக்கள் குளிரிலும் வாழும் இயல்புடையவை. எனவே சமைத்த உணவையும் சமைக்காத உணவையும் வேறாக்கி வைக்க வேண்டும்.
6 . பாஸ்டராக்கம் செய்யப்படாத உணவுகள் அல்லது அதன்மூலம் செய்யப்படும் உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.
7 . கைகள், கத்திகள், வெட்டும் பலகை என்பவற்றின் சுத்தம் பேணப்படல் வேண்டும்.
8. குளிர்சாதனப் பெட்டியில் வைத்த உணவுகள், பொதிசெய்த உணவுகள் என்பவற்றை உண்ண முன்பு சூடாக்க வேண்டும்.

## நோய் பரவாது தடுப்பூசி ஏற்றல்

இந்த நோய் ஆடுகளுக்குப் பரவுவதைத் தடுக்க தடுப்பூசி ஏற்றும்முறை நோர்வே போன்ற சில நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. ஆனால் ஆடுகளிலிருந்து பெறப்படும் வருமானத்துடன் ஒப்பிடும்போது தடுப்பூசியின் விலை மிகவும் அதிகமானது. எனவே இலங்கை போன்ற நாடுகளில் தடுப்பூசிகளின் விலைகளை கருத்தில்கொள்ளும்போது தடுப்பூசிகளை பயன்படுத்தி நோயைக் கட்டுப்படுத்துவது கேள்விக்குறியாகவே உள்ளது. எனவே நாம் வருமுன் காக்கும் முறையில் உச்சக்கட்ட விழிப்புணர்வுடன் செயற்படுவோம். எம் பண்ணைகளையும் ஆடுகளையும் பாதுகாப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைப்பூண்டு மோசடி:

# அரசிடம் தீர்வில்லையேல் அரசியலிலிருந்து ஓய்வு

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 4**

**“வெள்ளைப்பூண்டு மோசடிக்கு அரச தரப்பிடம் உரிய தீர்வு கிடைக்காவிட்டால் நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவேன்” என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

தனியார் ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

“சதொச நிறுவனத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடிச் சம்பவத்துக்கு என்னைத் தொடர்புபடுத்தும் சதித் திட்டம் இடம்பெறுகின்றது. அரசில் எனக்குத் தொடர்பில்லாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும் நான் கருத்து வெளியிடுவதில்லை” என்றார்.

வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் அண்மையில் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-22)

## அப்பியாசக் கொப்பிகள் கையளிப்பு



சாவகச்சேரி, ஒக். 4

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கைதடி சைவச்சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு என ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் இந்த உதவிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

கழகத் தலைவர் லயன் ஜெ.மினேஸ் தலைமையில் கழக உறுப்பினர்கள் நிலையப் பொறுப்பதிகாரியிடம் அப்பியாசக் கொப்பிகளைக் கையளித்தனர். (ஜ-9)

## கொரோனாப் பெருந்தொற்று

# தடுப்பூசிகளைப் பெறுவதற்கு இளைஞர்கள் பலர் தயக்கம்

கொழும்பு, ஒக். 4

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெறுவதற்கு இளைஞர்கள் பலர் தயக்கம் காட்டி வருகின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசியபோதே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் செனால் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

20 முதல் 30 வயதுக்குட்பட்ட 3.3 மில்லியன் இளைஞர்களில் மிகக் குறைந்த அளவிலானவர்களுக்கே



தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

எனவே தங்களையும் தங்கள் அன்புக்குரியவர்களையும் பாதுகாப்பதற்காக இளைஞர்களும் விரைவில் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ம)

## புதுக்குடியிருப்பில்

# நெஞ்சுவலி ஏற்பட்டு பெண்ணொருவர் சாவு

முல்லைத்தீவு, ஒக். 4

திடீரென நெஞ்சுவலி ஏற்பட்ட பெண்ணொருவர் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது சிகிச்சை பயனில்லாமல் உயிரிழந்தார்.

இடைக்கட்டு, வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த கணேஸ் விஜயா (வயது-52) என்னும் பெண் வீட்டில் இருந்த வேளை திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ள நிலையில், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அங்கு அவருக்கு முதல்கட்ட சிகிச்சை வழங்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டன. (ம-19)

# நடைபாதை அமைப்பதற்கு 20 மில்லியன் நிதி ஒதுக்கீடு

வவுனியா, ஒக். 4

இலங்கையின் நூறு நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் வவுனியா நகருக்கு 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் நூறு நகரங்களை அழகுபடுத்தும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டத்தின் கீழ் வவுனியா நகரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் முதற்கட்டமாக வவுனியா மணிக்கூட்டு கோபுரசந்தியில் இருந்து, பொதுமருத்துவமனை சுற்றுவட்டம் வரையான வீதிக்கரையில் நடைபாதை அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்



பட்டுள்ளது.

அதற்கான கேள்வி கோரப்பட்டு குத்தகையாளர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், இருபது மில்லியன் ரூபா பணம் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். இதேவேளை நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தத்தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் - என்றார். (ம-110)

## வெடிகுண்டு கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் கிழக்கு பகுதியில் உள்ள தோட்டக் காணியில் வெடிகுண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. காணியின் உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் காணியை துப்புரவு செய்தவேளை வெடிபொருள் அவதானிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஒ-27)


## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 03 . 1951 | இறப்பு 03 . 10 . 2021



**திரு. முத்தையாபிள்ளை கணேசன்**

**(தேசிய மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை முகவர்)**

திருச்சி மாவட்டம் ஓமாந்துரை பூர்வீகமாகவும், கண்டி கலஹாவை பிறப்பிடமாகவும், வவுனியா பட்டாணிச்சூரை வதிவிடமாகவும் கொண்ட திரு.முத்தையாபிள்ளை கணேசன் அவர்கள் நேற்று (03.10.2021) நண்பகல் காலமானார்.

அன்னார் குலசிந்தாமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்தையாபிள்ளை செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், கனகம்மா தம்பதியரின் மருமகனும், பிரசாத்தின் (Dialog Axiata PLC) தந்தையும், வாசுகியின் (Sierra Global (Pvt) Ltd) மாமனாரும், சஷேனியின் அன்பு பாட்டனாரும், காலஞ்சென்ற M.சுப்பிரமணியம் (அரசாணி பூசாரியார் - கலஹா), காலஞ்சென்ற P.பார்வதி (ஜோதி சினிமா -கலஹா), காலஞ்சென்ற T.தனலட்சுமி (ஓமாந்துரை) M.பெரியசாமி (மோகன்ஸ் கொழும்பு), காலஞ்சென்ற M.மாரிமுத்து (கலிகோஸ்), S.மல்லிகா (லங்கா ஜுவலர்ஸ், கேகாலை) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான உமாதேவி, கணேசபிள்ளை, தேவராயபிள்ளை மற்றும் புஸ்பராணி, இந்திராதேவி, சிவலிங்கம், புனிதவதி, குலசேகரம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற துரைசிங்கம், சரோஜாதேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், சேனாதிராஜா, பத்மினி (மாத்தளை) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: பிரசாத் (மகன்) 077 333 7563

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னார் வாசியின் உயிரிழப்பு தொடர்பில் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.4
மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் உயிரிழந்ததாகக் கூறப்படும் சந்தேகநபரின் சாவு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

கடந்த முதலாம் திகதி மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு நபர்களில் சம்சுதீன் மொகமட் றம்சான் எனும் நபர் சுகவீனமுற்று மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வேளையில் உயிரிழந்தார் என்று வெளியான செய்திகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் முதல் கட்டமாக குறித்த இரு நபர்களது கைதுடன் தொடர்புடைய விடயங்களை மன்னார் பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை பெறுவதற்கான வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட மற்றொரு நபரிடமிருந்து வாக்கு மூலம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி இந்த முறைப்பாடு 1996 ஆம் ஆண்டு 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையாக பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



யாழ்ப்பாண அடைக்கல அன்னை ஆலய இளைஞர்களின் ஏற்பாட்டில் இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழக அனுசரணையில் மாபெரும் இரத்ததான நிகழ்வு நேற்று நடைபெற்றது. அடைக்கல அன்னை ஆலய பங்குத் தந்தை, அருட் கன்னியர்கள் குருதி கொடையாளிகள் என 50க்கு மேற்பட்டவர்கள் குருதிக்கொடை வழங்கினர். (எ-9)


## வீடு வாடகைக்கு

திருநெல்வேலியில் வீடு வாடகைக்கு உண்டு

076 998 0837


## துயர் பகிர்கின்றோம்



தோற்றம் : 03.08.1953 மறைவு : 28.09.2021

எமது பாடசாலையின் ஆசிரியர்
**தனபாலசிங்கம் மதனகா**
அவர்களின் தந்தையார்
**அமரர் மாணிக்கம் தனபாலசிங்கம்**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி.**

## மரண அறிவித்தல்



### திருமதி தோமஸ் பெலிசிற்றஸ்

யாழ்ப்பாணம் இராஜேந்திரா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தோமஸ் பெலிசிற்றஸ் நேற்று (03.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவல் சூசைப்பிள்ளை. நேசம்மா தம்பதியரின் அன்பு மகளும். அரியகுட்டி தொம்பிறேஞ்சியா தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற அருளானந்தம் தோமஸ் அவர்களின் அன்பு மனைவியும். சில்வேஸ்ரர் (ஜேர்மனி). சாள்ஸ் அல்றின். றுபினா ஜெற்றூட் ஆகியோரின் அன்புத் தாயாரும். றாஜியா (ஜேர்மனி) கனகா. வசந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும். ஸ்றெலா (இளவாலை). ஸ்ரனிஸ்லொஸ். யசிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் அகஸ்ரீன். பத்மா ஆகியோரின் மைத்துனியும். றக்சனா. தர்சனா. ஸ்ரேசி (ஜேர்மனி). நிலக்ஷனா. சிம்றி (ஜேர்மனி). சில்வியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.10.2021) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
10.03.1938

விண்ணில்
14.10.2020

### திருமதி பற்குணராஜா மங்களேஸ்வரி

**திதி: புரட்டாதி திரயோதசி (04.10.2021)**

உதிரத்தால் கருத்துடனே உயிரதனை உருவாக்கி
அதரத்தில் பரிவுடனே அணைத்ததனை கருவாக்கி
இதயத்தில் கனிவுடனே ஈன்றெடுத்த எமதன்னை
பதமலரை நெகிழ்வுடனே வாழ்நாளில் போற்றிடுவோம்.

'மங்களவிலா'
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றும் பிரார்த்திக்கும்
**பிள்ளைகள். மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**மைத்துனர்கள், மைத்துனிகள்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 21 . 04 . 1954

இறப்பு 03 . 10 . 2021

### சின்னத்துரை சிவகடாச்சம்

நவாலியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவகடாச்சம் நேற்று (03.10.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும். மங்களேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சாமிநாதன், பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரமோகனின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 02 . 1936

இறப்பு 01 . 10 . 2021

### திரு. தம்பிப்பிள்ளை கந்தவனம்

**(ஓய்வுபெற்ற கட்டட மேற்பார்வையாளர்-கல்வித் திணைக்களம் வடமாகாணம், தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக்கழக முன்னாள் உறுப்பினர், கரப்பந்து வீரர்)**

சேகரம் வீதி. தையிட்டியை பிறப்பிடமாகவும். நாமகள் வீதி. கொக்குவில் கிழக்கு. கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தம்பிப்பிள்ளை கந்தவனம் அவர்கள் கடந்த (01.10.2021) வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும். காலஞ்சென்ற கந்தப்பிள்ளை செல்லமுத்து தம்பதியரின் மருமகனும். காலஞ்சென்ற இராசமலரின் அன்புக் கணவரும். காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை. சின்னம்மா. பொன்னம்மா ஆகியோரின் சகோதரரும். ஜெயந்தினி (கொக்குவில்). யசோதினி (ஜேர்மனி). ஜெனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும். பத்மநாதன். நடராஜா. ராஜி ஆகியோரின் மாமனாரும். சாருஜன்-சுகுமாரி. நிலோஜன். கேனுஜா. அபிஷ்னவி. ருக்ஷன். தினோசா-அச்சுதன். அனிஷ். வர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (03.10.2021) ஞாயிற்றுக்கிழமை சுகாதார விதிமுறைகளின் பிரகாரம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**
**0777 167 019**

*பாடசாலை...*

நாள்களாக நடைபெற்ற கலந்துரையாடல்களுக்கு அமையவும், கல்வி அமைச்சரின் ஆலோசனைக்கு அமையவும் பாடசாலைகளைக் கட்டம் கட்டமாக இந்த மாதம் ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

பாடசாலைகளில் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான விடயங்கள் அனைத்து ஆளுநர்களின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

நீண்ட காலமாகப் பாடசாலைகள் இயங்காது உள்ளதால் பாடசாலைகளின் சுற்றுப்புறச் சூழல், வகுப்பறைகள், தளபாடங்கள் என்பவற்றை ஒழுங்கமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைச் சீராக்கும் நடவடிக்கைகள் மாகாண ஆளுநர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

200க்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலைகள், 100 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் என சுமார் 3 ஆயிரம் பாடசாலைகளை, சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு : 01.11.1928 இறப்பு : 01.10.2021

## PANCHAMASOTHYNAYAGAM SABARATNAM

## திருமதி பஞ்சமசோதிநாயகம் சபாரத்தினம்

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் Darwin Australia ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சமசோதிநாயகம் சபாரத்தினம் டார்வின் அவுஸ்ரேலியாவில் கடந்த (01.10.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற துன்னாலை Overseer வல்லிபுரம் சேதுப்பிள்ளை ஆகியோரின் மகளும், மல்லாகம் Malayan Pensioner விசுவலிங்கம் தங்கமுத்துஅம்பாள் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற Registrar of Marriages விசுவலிங்கம் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சட்டத்தரணி வ.செல்லத்தம்பி, சிவநாயகம் வன்னியசிங்கம், சிவசோதிநாயகம் சிதம்பரநாதன் ஆகியோரின் சகோதரியும் Dr.V.குகதாசன் Melbourne காலஞ்சென்றவர்களாகிய V.M குமாரசுவாமி Retd Judge, Dr. ரத்தினவேல், சற்குணதேவி, Dr.நமசிவாய, தையல் நாயகி ஆகியோரின் மைத்துனியும், அவுஸ்ரேலியா பிரகஸ்பதி குணலிங்கம், பிரதாபன், பிரதீபன் UK, அவுஸ்ரேலியா நாட்டை சேர்ந்த Dr. சோமசுந்தரம், பாலரஞ்சன், கேதாரநாதன், கதிர்காந்தா, கிரிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் S. குணலிங்கம், இந்துமதி, உஷா, Dr. தர்மலக்ஸ்சுமி, மாலினி, சிவகௌரி, குமுதினி மதிவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.பிரிந்தாபன், பிரிஜந்தி, கிரிஷாந், அரவிந்த், லோகன், Dr. ரூபன், Dr.பிரவீன், தீபனா, பிரணவன், கர்ணன், ஜனனி, நிலானி, சோபன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், Grand Mother in Law of Dr. றஜீவ், கார்த்திகா, Dr.சுஜீவா, மேகா மற்றும் ஆரியா, அலிஸ்சா, அக்சரா, ஆஷா, மாறன், லக்ஷி, கீஷான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Darwin Australiaஇல் நாளை (05.10.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**

**S. பிரதீபன் + 447976712245 (UK மகன்)**
**சட்டத்தரணி கு. விசுவலிங்கம் 071 654 3294**
**பெறாமகன் (மல்லாகம்)**

**தொடர்பு :**

**பிரகஸ்பதி 029 858 4181 Aus**
**பிரதாபன் 0402027046 Aus**
**Dr. சோமா 0431258201 Aus**
**பாலா 041791741 Aus**
**கேதா 0434503794 Aus**
**காந்தா 0418122827 Aus**


# வேலையாட்கள் தேவையா?

- உங்கள் நிறுவனவத்திற்கு பொருத்தமான வேலையாட்களை எம்மிடம் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.
- நீங்கள் கட்டணம் செலுத்துவதன் மூலம் உங்கள் நிறுவன வேலை வாய்ப்புக்கள் உடனடியாக 5000 பேருக்கு மேல் அனுப்பி வைக்கப்படும்.

# யாழ் வேலை வாய்ப்புகள்

- கட்டணப் பதிவு செய்வதன் மூலம் உங்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்களை விரைவில் பெற்றுக் கொள்ளலாம். (Rs 2000/= /Rs 3000/=)
- இலவச வேலை வாய்ப்பு தகவல்களை Whats App மூலம் உடனடியாக பெற்றுக் கொள்ள உங்கள் Whats App இலக்கத்தை எமக்கு தெரிவித்த பின் (Miss Call / Message) 074 138 3368 எனும் எமது இலக்கத்தை உங்கள் தொலைபேசியில் Save பண்ண வேண்டும்.

**DEWMAS**
**51, Amman Road, Nallur.**
**074 138 3368**
**dewmasweb.com**


# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 01 |
| 05 | 10 |
| 1929 | 2021 |



## திருமதி மகேஸ்வரி செல்வநாயகம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி செல்வநாயகம் கடந்த (01.10.2021) வெள்ளிக்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பு (Malayan Pensioner) இராசம்மாவின் பெறா மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பத்மாவதி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் இராசமணி, காலஞ்சென்ற வேலாயுதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் நடராஜா, இராஜரட்ணம், துரை மற்றும் ஞானமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கம்ஷலா (இந்தியா), சுகிர்தலா (வவுனியா), செல்வகுமார் (கனடா), வத்ஷலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமநாதன் (இந்தியா), துரைராஜா (வவுனியா), சித்திராதேவி (கனடா), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தூரன் - ரூபி, Dr. சர்மிளா - சிவஜங்கரன், சாரங்கன் - யக்கி, கன்னியா, சுரேன் - டக்ஷி, சுபோதினி - அலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எழிலன், சுவேதா, துஷாந், கிரிஷாந், சஹானா, சியான், ஜலா, சாய்ரா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்றைய தினம் (01.10.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் வழுக்கையாற்று இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**மூளாய் வீதி,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
## சபை நிதி - 2021

01. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. சபைநிதியினைக்கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம். தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதிபுனரமைப்பு. கட்டட வேலைகளுக்கு கோருகின்றார்.
04. கேள்விதாரர்கள் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன். வீதிபுனரமைப்பு. கட்டட நிர்மாண அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) தொலை பேசி:-0212241130. தொலைநகல்:-0212243688இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற் கூறிய இடத்தில் வேலைநாட்களில் 04.10.2021 ஆம் திகதியிலிருந்து 18.10.2021 வரைகாலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 04.10.2021ஆம் திகதியிலிருந்து 18.10.2021 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 18.10.2021 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப் பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும், கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடி யாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 1 | NP/14/41(14)/05 /02/148/CF-23/2021 | சீராவளை எல்லை மதில் அமைத்தல் -வித்தகபுரம் | 3.960 | 90 நாட்கள் | C8/C7 கட்டட நிர்மாணம் | 63 நாட்கள் | 20.12.2021 | 40000.00 | 17.01.2022 |
| 2 | NP/14/41(14)/05 /02/149/CF-24/2021 | பழைய குடியேற்றத் திட்ட 5வது,6வது வீதி புனரமைப்பு-நகுலேஸ்வரம் | 2.420 | 90 நாட்கள் | C8/C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 20.12.2021 | 24000.00 | 17.01.2022 |
| 3 | NP/14/41(14)/05 /02/150/CF -25/2021 | முளவை குறுக்குவீதி புனரமைப்பு - மயிலிட்டி | 1.450 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 20.12.2021 | 15000.00 | 17.01.2022 |
| 4 | NP/14/41(14)/05 /02/151/CF-26/2021 | வண்டியன்கலட்டி வீதி புனரமைப்பு - பலாலி கிழக்கு | 2.340 | 90 நாட்கள் | C8/C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 20.12.2021 | 23000.00 | 17.01.2022 |
| 5 | NP/14/41(14)/05 /02/152/CF-27/2021 | குழுவன்கலட்டி வீதி புனரமைப்பு-வித்தகபுரம் | 1.670 | 60 நாட்கள் | C9/C8 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 20.12.2021 | 17000.00 | 17.01.2022 |
| 6 | NP/14/41(14)/05 /02/153/CF-28/2021 | தவம் வீதி புனரமைப்பு - வசாவிளான் | 2.045 | 90 நாட்கள | C8/C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 20.12.2021 | 20000.00 | 17.01.2022 |
| 7 | NP/14/41(14)/05 /02/154/CF-29/2021 | நாக்கணாவத்தை வீதி புனரமைப்பு - அளவெட்டி மேற்கு | 2.330 | 90 நாட்கள் | C8/C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 20.12.2021 | 23000.00 | 17.01.2022 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 11.10.2021 ஆம் திகதி பி.ப.15.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

**திரு.சோ.சுகிர்தன்**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை**

**04.10.2021**

# வீடு வாடகைக்கு

பிறவுண் வீதியில் வீடு
வாடகைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை

தொடர்பு 076 041 6666

**முக்கிய ஆவணங்கள் I.C அட்டையுடன் K.K.S வீதியில் தவறவிடப்பட்டுள்ளது**

ஆட்பதி. சாரதி. I.C. அட்டைகள் , தொழில் I.C. அட்டைகள். மோட்டார் வாகன அனுமதி பத்திரங்களுடன் வேறு பதிவு அட்டைகள் பற்றுச்சீட்டுகள் ஆகிவை அடங்கிய சிறிய பேர்ஸ் தவறவிடப்பட்டுள்ளது.
நா.தனபாலசிங்கம்
கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 511 1957, 075 046 6919

# மரண அறிவித்தல்



மலர்வு - 29.11.1971 உதிர்வு - 29.09.2021.

## நல்லையா அண்ணதாசன்
Happy Market உரிமையாளர்

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் சேமமடு மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா அண்ணதாசன் அவர்கள் புரட்டாதி 29 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற சரவணமுத்து நல்லையா, இராசேஸ்வரி ஆகியோரின் மூத்த புதல்வனும், காலம் சென்ற நாராயணன், விஜயலட்சுமி ஆகியோரின் மருமகனும், கோமளவல்லி அவர்களின் பாசமிகு கணவரும், அகநிலவன் அவர்களின் அன்புத்தந்தையும், இளஞ்செழியன், குமுதா, கவிதா, நெடுஞ்சேரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சரவணமுத்து சிவலிங்கம், புஸ்பகாந்தி, காலம்சென்றவர்களான செல்வரத்தினம், கனகேஸ்வரி, ஆகியோரின் பெறாமகனும், காலம்சென்ற சோதிலிங்கம், கமலாநிதி,காலம்சென்ற கேதீஸ்வரன் ஆகியோரின் மருமகனும், அன்பழகன், சௌத்ரி, யசோதா, நிதர்சினி, ஹரி, திவாகரன் ஆகியோரின் மைத்துனரும், சாஸ்வதன், சாகித்தியன்,சாத்வீகன், சுருதிகா,ஷைந்தவி, ஆகியோரின் அன்பு மாமனாரும், இளந்திரையன், இளவஞ்சி, நீரல்யா, ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் கொலன்னாவ பொதுமயானத்தில் 30.09.2021 திகதியன்று தகனம் செய்யப்பட்டது.**

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல் - குடும்பத்தினர்.
அம்மா - 077 2087350, மனைவி - 074 1792806, சகோதரன் - 077 7716960

# மரண அறிவித்தல்

## திருமதி பாலேந்திரா பாக்கியலட்சுமி



மலர்வு 06.12.1958 உதிர்வு 01.10.2021

காரைநகர் மல்லிகையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் கணக்கனார் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலேந்திரா பாக்கியலட்சுமி அவர்கள் கடந்த (01.10.2021) வெள்ளிக்கிழமையன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகரத்தினம் - தேவிகாராணி தம்பதியினரின் பாசமிகு மருமகளும், பாலேந்திரா அவர்களின் அன்பு மனைவியும் குபேரன் (திட்டமிடல் செயலகம் - வடக்கு மாகாணம்), குபேரதி ஆகியோரின் அன்புத் தாயும், மயூரன் அவர்களின் பாசமிகு மாமியாரும், சயன், பத்மஜா, சரண் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், கணேசபிள்ளை, சண்முகசுந்தரம்பிள்ளை, தனலட்சுமி, ஜெயராஜசிங்கம்பிள்ளை, சிறிவள்ளிநாயகம்பிள்ளை (France) நாகரத்தினம்பிள்ளை ஆகியோரின் அன்புத் தங்கையும், பாலராணி, காலஞ்சென்றவர்களான பாலசந்திரன், பாலேஸ்வரன் மற்றும் பாலரஞ்சினி (UK), காலஞ்சென்ற சூரியகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (02.10.2021) சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**குபேரன் (மகன்)**
**077 779 4412, 021 221 1763**

**கணக்கனார் கண்டி,**
**காரைநகர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா...

ளம் நேற்று அறிவித்தது.

இந்த உயிரிழப்புக்களுடன் நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 59 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

## இலங்கை அரசை...

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்காவில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட நாம் பல சர்வதேச நாடுகளின் தலைவர்களையும், அந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களையும் தனித்தனியாகச் சந்தித்தோம். அப்போது எமது அரசின் வெளிநாட்டுக் கொள்கையைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

வெளிநாடுகளைப் பகைத்துக்கொண்டு செயற்படும் நோக்கம் எமது அரசுக்கு இல்லை. எதிரணியினர் கூறுவதுபோல் வெளிநாட்டுக் கொள்கையை நாம் இலங்கைக்கு எதிராக மாற்றியமைக்கவில்லை. அவர்கள் கூறுவதுபோல் நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரைவார்க்கும் நோக்கமும் எமக்கு இல்லை.

சர்வதேச நாடுகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கவே இலங்கை அரசு விரும்புகின்றது. இலங்கையின் இறையாண்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வெளி நாடுகளுடன் உறவை வளர்ப்போம். எந்த நாடும் எம்மை அச்சுறுத்த முடியாது. அதேபோல் எந்த நாட்டுக்கும் நாம் அடிபணியவும் மாட்டோம்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகள் தொடர்பில் எமது அரசின் நிலைப்பாட்டை ஜெனிவாக் கூட்ட அமர்வில் தெரிவித்துவிட்டோம். வெளியகப் பொறிமுறையை நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம்-என்றார். (எ-22)

## இலங்கை...

நேற்று கண்டி, தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டதுடன், மதத் தலைவர்களையும் சந்தித்தார். அதன்பின்னர் திருகோணமலைக்குச் சென்று திருகோணமலை எண்ணெய் தாங்கிகளையும் பார்வையிட்டதுடன், இந்திய நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகளையும் ஆராய்ந்தார். இந்தப் பயணங்களின்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயும் கலந்துகொண்டார்.

அதன்பின்னர் வடக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலாளர், வவுனியா - செட்டிகுளத்தில் இந்திய வீட்டுத் திட்டம் ஒன்றின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டார். அதன்பின்னர் வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உள்ளிட்ட அதிகாரிகளுடன் சந்திப்பொன்றில் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணம் வந்த இந்திய வெளியுறவுச் செயலாளர், யாழ்ப்பாணம் நகரத்தில் இந்திய நிதியுதவியில் அமைக்கப்படும், கலாசார மண்டபத்தையும் பார்வையிட்டார். இதன்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் இன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோரைச் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. பிற்பகல் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட ஆளுந்தரப்பின் முக்கிய தரப்பினர்களைச் சந்திப்பார் என்று கூறப்படுகின்றது. 5ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருக்கும் இந்திய வெளியியுறவுச் செயலர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுடனும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார். (எ-26,20)

## அரசாங்க...

கின்றது. அண்மையில் அமெரிக்க நிறுவனத்துடன் கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக அரசு மேற்கொண்ட உடன்படிக்கையின் பின்னர் இந்த முரண்பாடுகள் உக்கிரமடைந்துள்ளன. பங்காளிக் கட்சிகளில் சிலர் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் அரசை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, அரசு நிலையான அரசு. இந்த அரசை எந்தவொரு சூழ்ச்சியாலும் கவிழ்க்க முடியாது. அரசுக்குள் எவரும் இருக்கலாம்; எவரும் வெளியேறலாம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எமது அரசில் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமிருக்கின்றது. எவரும் அரசை வாழ்த்தலாம்; விமர்சிக்கலாம் என்றும் தெரிவித்துள்ள பஸில் ராஜபக்ச, ஆனால், அரசை வீழ்த்தலாம் என்று உள்ளேயும் வெளியேயும் யாரும் சூழ்ச்சி வகுத்தால் அது ஒருபோதும் வெற்றியளிக்காது என்றும் தெரிவித்துள்ளார்.

அரசுக்குள் எவரும் இருக்கலாம்; எவரும் வெளியேறலாம். எவரும் புதிதாக இணையலாம். எமது கதவு எப்போதும் திறந்திருக்கும் என்று கூறியுள்ள பஸில் ராஜபக்ச, ஆனால், அரசுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுவோருக்கு உரிய நேரத்தில் தக்க பதிலடி கொடுப்போம் என்றும் எச்சரித்துள்ளார்.

தற்போதைய அரசில் முக்கிய அங்கம் வகிக்கும் பஸில் ராஜபக்ச இவ்வாறு பகிரங்கமாக பங்காளிக் கட்சிகளை எச்சரித்துள்ளமை, அரச கூட்டுக்குள் முரண்பாடு கள் உச்சம் பெற்றுள்ளதையே காட்டுகின்றது என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். (எ-22)

## இலங்கை - இந்திய...

டபபட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக, எண்ணெய் குதங்கள் தொடர்பில் முதற்றடவையாக இந்தியாவுடன் சட்டப்பிணைப்பு ஏற்படுத்தப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் கால எல்லை 2024 ஆம் ஆண்டுடன் நிறைவடை கின்றது. இந்த உடன்படிக்கையை புது ப்பித்துக்கொள்ளும் நோக்கிலேயே இந்திய வெளிவிவகாரச் செயலாளர் இலங்கை வந்துள்ளார் என சுட்டிக்காட்டும் துறைசார் தொழிற்சங்கங்கள், உடன்படிக்கை புதுப்பிக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், இது தொடர்பில் இன்றும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்ற தகவலை அநுராதபுரத்தில் வைத்து நேற்று வெளியிட்டார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

"இந்த வேலைத்திட்டத்தை எதிர்காலத்தில் எந்த அடிப்படையில் முன்னெடுப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன. பரந்தபட்ட கலந்துரையாடல்களின் பின்னரே தீர்மானம் எட்டப்படும். இது விடயம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை."என்றும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (எ-44)

## கலாசார....

இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஸ்ரீங்லா நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் யாழ்ப்பாணம் நகரில் இந்திய அரசின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுவரும் கலாசார மண்டபத்துக்குச் சென்று பார்வையிட்டார். அங்கு வைத்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலாசார மண்டபம் வெகு விரைவில் திறக்கப்படும். கலாசார மண்டபம் திறக்கப்பட்ட பின்னர் 5 ஆண்டுகளுக்குக் கட்டடத்தின் பராமரிப்புச் செலவுகளை இந்தியாவே பொறுப்பேற்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-26)

## ஆசிரியர்....

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

எந்தவிதமான தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பாடசாலைக்கு வரவேண்டுமாயின் தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்து 84 நாள்கள் கடந்துள்ளன. தீர்வு வழங்குவதில் அரசு தாமதிப்பதாலேயே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான திகதிகளை அரசு முன்மொழிகின்றது. பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தேவை.

தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் ஒரு தீர்வை வழங்குவதே கற்பித்தல் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான ஒரே வழி என்றார்.

312 கோட்டக் கல்வி அலுவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## தமிழ்....

தகுந்த அணுகுமுறை ஒன்றை ஆராய்ந்து வகுக்கும் பணிப்பு பரந்துபட்ட வரவேற்பு கிடைத்துள்ளது என்று தமிழ் மக்களாட்சிச் செயற்குழு தெரிவித்துள்ளது.

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கி.நோயல் இம்மானுவேல் மற்றும் தென் கயிலை ஆதீனம் அகத்தியர் அடிகளார் ஆகியோரின் மேற்பார்வையில் உருவான தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் எட்டு நாள் செயற்பாடு மற்றும் பொது அடைவுகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது,

இந்த முயற்சிக்கு கிடைத்துள்ள வரவேற்பு வடக்கு-கிழக்கில் உள்ள வரலாற்றுத் தேவையை மட்டுமல்ல, மக்களின் ஆதங்கத்தையும், வேணவாவையும் வெளிப்படுத்துகின்றது.

இந்த முயற்சியின் பிரதான இலக்கு, ஈழத் தமிழர்களின் தேசிய அரசியல் கூட்டு உரிமைகளையும் கூட்டுக் கோரிக்கைகளையும் மக்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், பங்குபெறும் மக்களாட்சி முறையில், உரிய வெளிப்படைத்தன்மையோடு ஊடாடி, அவற்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆணையைக் கொடுத்து, சர்வதேச பரப்பு உள்ளடங்கிய பொதுவெளியில், நம்பகமான முறையில், மக்களாட்சி அறத்துக்குட்பட்டு, காலந்தவறாது வெளிப்படுத்தச் செய்வதற்குரிய சட்டகத்தை உருவாக்குதலே என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

தமிழ் அரசியல் கட்சிகளை, அல்லது கூட்டமைப்பு மற்றும் முன்னணிகளை, கட்டமைப்பு ரீதியாக இணைக்கும் முன்னெடுப்பாக இதைத் தவறாக விளங்கிக்கொள்ள வேண்டாம் என்பதைச் செயற்குழு அழுத்தம் திருத்தமாகத் தெளிவுபடுத்த விரும்புகிறது.

தேர்தல் அரசியலின் நெளிவு சுழிவுகளுக்குள் நுழைவதோ, கட்சிகளுக்கிடையே அல்லது அவற்றுக்குள்ளே இருக்கக்கூடிய பிணக்குகளுக்குள் தலையிடுவதோ, அல்லது அவற்றை ஆராய்வதோ இந்த முன்னெடுப்பின் இலக்கு அல்ல.

எதிர்காலத்தில், தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உரிய படிமுறைகளில் உள்வாங்கிச் செயற்படுத்தக்கூடிய வகையில், இதன் ஆய்வெல்லைகள் ஆரம்பத்திலேயே விரிவுபடுத்தப்பட்டிருக்கும் என்பதையும் மக்களுக்கு அறியத் தர விரும்புகின்றோம்.

பூர்வாங்கத் திட்டமிடல் செயற்பாடுகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு பொதுத் தொடர்புகளைக் கையாள்வதற்குமான சட்டத்தரணிகள் குழு ஆரம்பத்தில் நியமிக்க ப்பட்டிருந்தது. பல மாவட்டங்களில் இருந்தும், பால் சமநிலையோடு சட்டத்தரணிகளின் ப்ங்களிப்பு இருக்கவேண்டும் என்றவிருப்போடு, மூவருக்குப்பதிலாக, ஐவர் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். முதற்கட்டமாக, செயற்குழுவுக்குத் தரப்பட்டுள்ள சிக்கலும், பணிக்குரிய இலக்கும் வரையறை செய்யப்பட்டுள்ளன. இவற்றைப் போலவே, பூரணப்படுத்தப்பட்டுள்ள பொதுத்தொடர்புக் குழுச் சட்டத்தரணிகள், முன்னெடுப்புக்குரிய ஆய்வெல்லைகளை எதிர்வரும் நாட்களில் வகுக்கவுள்ளனர். செயற்குழுவின் இணையத்தளமான www.tamildemocracy.org இல் தரப்பட்டுள்ள சிக்கலும், பணியின் இலக்கும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியாகியுள்ளது. அவற்றை மேலும் மெருகூட்ட விரும்புவோர், தமது வரைபுகளை, மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம் - என்றுள்ளது. (எ-இ)

## வீடு புகுந்த...

ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. வீட்டிலிருந்த இரு கைபேசிகள் மற்றும் 2 ஆயிரம் ரூபா பணம் என்பவை கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த தாயும், மகனும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் மூவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-159)

## ஊரெழுவில்....

போது பொலிஸாருடன் முரண்பட்டதால் பொலிஸார் எச்சரிக்கை வேட்டுகள் தீர்த்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று இரவு ஊரெழுப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. சுன்னாகம் பொலிஸார் அந்தப் பகுதியில் வீதி ரோந்தில் ஈடுபட்டபோது, மோட்டார் சைக்கிளில் ஒருவர் தலைக்கவசம், முகக்கவசம் என்பவற்றை அணியாது பயணித்துள்ளார்.

அவரை மறித்த பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டபோது, அந்தப் பகுதி சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்டதல்ல என்று தெரிவித்து அந்த நபர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்றும், இந்த முரண்பாட்டை அடுத்துப் பலர் கூடிய நிலையில் எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்த்து பொலிஸார் அவர்களைக் கலைத்தனர் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, முரண்பாட்டில் ஈடுபட்டவர் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-26,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளேஓவ் சுற்றில் பெங்களூர்





டுபாய், ஒக். 4

**ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பைத் தோற்கடித்து பிளேஓவ் சுற்றை உறுதிப்படுத்தியது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்கள் இருவரும் சொல்லிக்கொள்ளும்படியான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். இலக்குச் சரிவில்லாமல் அணி 50 ஓட்டங்களைப் பெற்றது. 68 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோலி. இதற்காக அவர் 24 பந்துகளை எதிர்கொண்டார். கிறிஸ்ரியன் கோல்டன் டக் முறையில் வெளியேற்றப்பட்டார். படிக்கலின் இலக்கும் படிப்படியாகச் சரிக்கப்பட்டது. அவர் 38 பந்துகளில் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆக, ஆரம்ப வீரர்களான கோலி, படிக்கல் இருவரினதும் பெறுபேறு அணிக்கு அவ்வளவு பெரிய உறுதித்தன்மையைக் கொடுக்கவில்லை. மக்ஸ்வெல் 33 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். வில்லியர்ஸும் 23 ஓட்டங்களைப் பெற 7 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர்.

பந்துவீச்சில் சமி, ஹென்றிக்ஸ் இருவரும் தலா 3 இலக்குகளைப் பெற்றனர். பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்ப வீரர்கள் இருவரும் பலமான அத்திபாரத்தை அமைத்துக் கொடுக்கவே செய்தனர். 6 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது பஞ்சாப். ராகுல் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுதான் தாமதம் பஞ்சாப்பின் ஓட்டச் சராசரியில் தொய்யு ஏற்பட்டது. இறுதி 6 பந்துப்பரிமாற்றங்களில் 63 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலை. அகர்வால், மார்க்ரம், சாருக்கான் என்று ஒருவர்பின் ஒருவராக ஏமாற்ற 6 ஓட்டங்களால் வென்றது ஆர்.சி.பி. (ம)

# ப்ளேஓவ் செல்வதில் மும்பைக்குச் சிக்கல்

டுபாய், ஒக். 4

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் மும்பையை வீழ்த்தியது டெல்லி. இந்தத் தோல்வியை அடுத்து மும்பை ப்ளேஓவ் சுற்றுக்குச் செல்வது சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பைக்கு ஆரம்ப வீரரான ரோகித் சர்மா பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தார். சூரியகுமார் நேற்று ஓரளவு சிறப்பாகச் செயற்பட்ட போதிலும் வேறு எந்த வீரரும் மாத்திரமான பங்களிப்பை வழங்கவில்லை. 18 பந்துகளில் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குயின்டன் டி ஹொக். திவாரி 18 பந்துகளில் 15 ஓட்டங்களையும், பாண்டியா 18 பந்துகளில் 17 ஓட்டங்களையும் மட்டுமே பெற்றனர். 33 ஓட்டங்களுடன் சூரிய குமாரும் ஆட்டமிழக்க முடிவில் மும்பை அணி 8 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் அவேஸ் கான், அக்சர் பட்டேல் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணிக்கும் ஆரம்பம் மந்தமாகத்தான் அமைந்தது. பிருத்வி 6 ஓட்டங்களுடனும், தவான் 8 ஓட்டங்களுடனும், சிமித் 9 ஓட்டங் களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். 30 ஓட்டங்களில் 3 இலக்குகளை டெல்லி இழந்தது. மும்பையின் ஆதிக்கத்தை தனது அதிரடி மூலம் பிற்போகச் செய்தார் பன்ட். அவர் 22 பந்துகளில் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அக்சர் பட்டேல் 9 ஓட்டங்களுடனும், ஹெட்மயர் 15 ஓட்டங்களுனும் ஆட்டமிழந்த போதிலும் மறுமுனையில் நிலைத்துநின்று மும்பையின் எழுச்சியை இல்லாமல் செய்துகொண்டிருந்தார் ஸ்ரேயாஸ். அவருக்கு நல்லதொரு இணைப்பாட்டத்தை வழங்கினார் அஸ்வின். 5 பந்துகள் மீதமிருக்க மும்பையை வீழ்த்தியது டெல்லி. ஸ்ரேயாஸ் 33 ஓட்டங்களையும், அஸ்வின் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். (ம)

IELTS Life Skill - A1 New Batch
தனிப்பட்டதும், குழு வகுப்புக்கள்
ஆரம்பம் Cont - 077 798 9830
53, சிவகுருநாதர் வீதி, Brown Rd

Chemistry Zoom Class
23 Batch . 06.10.2021
22 Batch - Organic Chemistry
By A. Noel
Contact No : 075 208 9154

வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் கச்சேரி சுற்றுவட்டாரத்தில் சிறிய குடும்பத்திற்கு உகந்த வீடு வாட்டகைக்கு உண்டு.
தொடர்புகட்கு: 077 2377 465

வீட்டு உதவியாளர் தேவை
வீட்டில் தங்கியிருந்து வீட்டு உதவிகள் மற்றும் ஒரு வயது குழந்தையை வளர்க்கக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை.
வயதெல்லை 25 தொடக்கம் 35 வரை விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 986 6032

வேலைவாய்ப்பு
யாழ் நகரில் இயங்கிவரும் எமது காட்சியறைக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை.
சம்பளம் - 20,000/= இல் இருந்து
தகுதிக்கேற்ப மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 855 4840

விரைவு பொதிகள் சேவை
உள்நாடு - 24 மணித்தியாலத்திலும்
வெளிநாடு - 72 மணித்தியாலத்திலும்
ஒப்படைக்கப்படும். (நிபந்தனைக்குட்பட்டது)
U.K Over 11Kg - 1000/=
"Pickup Service உண்டு" [வேலையாட்கள் தேவை]
Lanka Cargo Worldwide Express
315, Kasthuriyar Road, Jaffna.
Hotline - 076 2832 397, 070 3750 002.

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
பதவி வெற்றிடம்
(1) உதவி கணக்காளர் - (பெண்கள்)
(2) முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
கல்வித் தகைமை : க.பொ.த. உயர்தரம் (வர்த்தகப் பிரிவு) சித்தி
நேர்முகத் தேர்வு : 07.10.2021 வியாழக்கிழமை முற்பகல் 11.00
183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3814 செயலாளர்.

காணி விற்பனைக்கு
தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன். பரப்பு 6 இலட்சம் ரூபாய்.
பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.
077 814 7389, 077 614 7333

வேலையாட்கள் தேவை
சுண்டுக்குளி பிரதேசத்தில் இயங்கி வரும் Digital Marketing நிறுவனம் ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
கணினி மற்றும் ஆங்கில அறிவிற்கு முன்னுரிமை.
சம்பளம் 20,000 /- - 40,000/-
கீழ் உள்ள மின்னஞ்சலிற்கு CV இனை விண்ணப்பிக்கவும்.
csdbmerchants@gmail.com

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் - காரைநகர் வீதியில், ஓட்டுமடம் சந்தியில் இருந்து 500 M தூரத்தில் 20 அடி பாதையுடன் 6 பரப்பு காணி விற்பனைக்கு இரண்டு பரப்பாக பிரித்து வழங்கப்படும். (யாழ் மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2 KM தூரம்)
076 221 2037, 077 288 0152, 076 734 1023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.